
ஸ்ரீ குமரன்
நகை மாளிகை
இல: 74,நெல்லியடி,கரவெட்டி
யாழ்ப்பாணம்
T.P- 077 8733482

தினப்புயல்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06


கலையரசி
நகைமாடம்
புதுக்குடியிருப்புச் சந்தி,
புதுக்குடியிருப்பு.
T.P- 0774357193

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –402

# ரணில் ஒரு ராஜதந்திர நரி!



## உள்ளூராட்சி தேர்தல் மன்றில் போட்டியிடும்

## 50வீதமானவர்கள் கொலை,கொள்ளை,கற்பழிப்போடு தொடர்புடையவர்கள்



## தமிழ் தேசிய மக்கள் முன்னணி 13ஐ ஏன் எதிர்க்கின்றது? பௌத்த பேரினவாதிகள் ஏன் எதிர்க்கின்றார்கள்?





# ரணில் ஒரு ராஜதந்திர நரி!

13 ஆம் திருத்த சட்டம் தொடர்பாக பௌத்த தேரர்கள் தென்னிலங்கையிலே குழப்பத்தை விளைவித்துக் கொண்டிருக்கின்றார்கள். தற்பொழுதும் கூட பாராளுமன்றத்திற்கு முன்பாக ஒரு பதட்டமான சூழல் ஏற்பட்டிருக்கின்றது. 13 ஐ அமுல்படுத்தக்கூடாது என்று பௌத்த துறவிகள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இதில் அஸ்கரிய பீடம் தான் இவ்வாறான முடிவுகளை எடுப்பது பௌத்த துறவிகள் அனைவரும் ஒன்றிணைந்து அஸ்கரிய பீடத்துக்கு வலியுறுத்தும்பொழுது இந்த நாடு தனி வடகிழக்கிணைந்த தமிழர் தாயகமாக சென்றுவிடும் இவ்வாறு செல்வதால் இலங்கைக்கு ஆபத்து என்ற கருத்துக்களை கூறி இனவாத அரசியலைத் தான் இந்த பௌத்த தேரர்கள் செய்து வருகின்றார்கள். சிறிமாவோ பண்டாரநாயக்க இருந்த 1956 ஆம் ஆண்டு காலப்பகுதியிலே தனி சிங்கள சட்டம் இந்த நாட்டிலே கொண்டுவரப்பட்டது. தனி சிங்கள சட்டம் கொண்டுவரப்பட்ட காலத்தில் இருந்து தொடர்ந்தும் வந்த அரசாங்கங்களும் அதையே கடைப்பிடித்து வந்தார்கள். இதனை தனி சிங்கள சட்டம் கொண்டு வந்ததற்கு எதிராக தந்தை செல்வா பாராளுமன்றத்திலே எதிர்ப்பை தெரிவித்து வெளியேறினார். உலக தமிழராட்சி மாநாட்டிலே குழப்பத்தை ஏற்படுத்தி அவர்களை சிறையில் பிடித்து அடைத்தார்கள். இவ்வாறு கொடுமைகளை நடத்திய இலங்கை அரசியலில் இயங்கிவரும் அனைவருமே ஒரு இனவாத அரசியலை தொடர்ந்தும் மேற்கொள்வதற்காக கடந்த காலத்திலே விடுதலைப்புலிகளின் யுத்தத்தை காரணம் காட்டினார்கள். இன்று விடுதலைப்புலிகளின் யுத்தம் இந்த நாட்டிலே இல்லை. எனவே யுத்தம் தொடர்ந்தும் இடம்பெற்றுக்கொண்டிருந்தால் அதையொரு காரணமாக சொல்லலாம் ஆனால் யுத்தம் முடிவடைந்து கிட்டத்தட்ட 13 ஆண்டுகளை கடந்துள்ள நிலையில் மீண்டும் ஒரு இனவாதத்தை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பௌத்த தேரர்கள் மேற்கொண்டு வருவது கண்டிக்கப்பட வேண்டிய விடயமொன்று.

எனவே பௌத்த தேரர்கள் தான் ஆட்சியாளர்களை தீர்மானிக்கின்றவர்களாகவும் இருக்கின்றார்கள். பொதுபல சேன. இராவணபலசேன. அதே போன்று கலகொட ஞானசார தேரர் குறுகிய காலத்திலே பிரபல்யமாகி நாட்டிலே பாரிய பிரச்சனைகளை தோற்றுவித்துக்கொண்டிருந்தார். இவற்றை நாம் பார்க்கும் பொழுது தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வுதிட்டத்தை பௌத்த பேரினவாதிகள் தருவதற்கு மறுத்து வருகின்றார்கள் என்பதே வெளிப்படையாக காட்டப்படுகின்றது. ஆனால் இலங்கைத் தீவு இது எங்களது நாடு விரும்பினால் இருங்கள் அல்லது நாட்டை விட்டு வெளியேறுங்கள் என்ற தொணியில் தான் இவர்கள் தொடர்ந்தும் பேசிவருகின்றார்கள். இதில் தமிழ் தரப்பு தெளிவடைய வேண்டும். தமிழ் தரப்பை பொறுத்த வரையிலே இன்று சிங்கள பேரினவாதிகள் தாங்கள் ஒன்றிணைந்து தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கையை எடுக்கும் பொழுது ஈ.பி.டீ.பி யோ ரெலோவோ புளொட்டோ அல்லது கருணாவோ பிள்ளையானோ யாராகவேனும் இருக்கலாம். ஒரு தமிழ் தரப்பு என்று வரும்பொழுது ஒரு குடையின் கீழ் நின்று நாம் குரல் கொடுக்க வேண்டிய சூழலுக்குள்ளே தள்ளப்பட்டிருக்கின்றோம். மாறி மாறி இப்படி ஏமாற்று அரசியலை செய்வது. ஜெனீவாவின் தீர்மானங்களுக்கு ஆதரவு வழங்குவது போன்ற விடயங்களை தொடர்ந்தும் இந்த அரசாங்கங்கள் குவித்துக்கொண்டிருக்கின்ற நிலையிலே தங்களுக்கு ஆதரவான ஒரு நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டிருக்கின்ற இந்த காலகட்டத்திலே ஏன் நாங்கள் குறிப்பாக இந்த இனவாத கட்சிகளுக்கும் அரசாங்கத்திற்கும் தொடர்ந்தும் அடிவருடிகளாக செயற்பட வேண்டும் என்றும் சற்று உணர வேண்டும். ஏனென்றால் தமிழ் தரப்பை பொறுத்தவரையில் தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றுகின்ற நாடகத்தை நடத்தக்கூடாது தமிழீழ விடுதலைப்புலிகள் தான் கடந்த காலத்திலே நாம் அரசியல் நடவடிக்கைகளை செய்வதற்கு தடையாக இருந்தார்கள் என்று கூறிக்கொண்டிருந்த ரெலோ. புளொட். ஈ.பி.ஆர்.எல்.எப். ஈ.பி.டீ.பி போன்ற இயக்கங்கள் தற்பொழுது தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் மௌனிக்கப்பட்ட இந்த நிலையிலே நீங்கள் அரசாங்கத்திடமிருந்து பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காணமுடியும் என்று கூவி கொக்கரிக்கின்ற மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட இன்று இந்த பௌத்த இனவாதிகளுக்கு எதிராக என்ன போர் கொடியை தூக்கியிருக்கின்றீர்கள். அல்லது பௌத்த இனவாதிகளுக்கு எதிராக உங்களால் ஏன் ஒரு ஆர்ப்பாட்டத்தைக்கூட முன்னெடுக்க முடியாமல் இருக்கின்றது. இவ்வாறு நீங்கள் முன்னெடுக்கின்றபொழுது தான் தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் நோக்கி நகர முடியும். காரணம் கடந்த காலம் கடந்த காலம் என பேசிக்கொண்டிருப்பதில் எந்த பயனும் இல்லை.

இந்த அரசாங்கம் அவ்வப்போது என்ன என்ன முடிவுகளை எடுக்கின்றார்கள் என்பதனை அவதானித்து அந்த முடிவுகளுக்கேற்ப தமிழினத்தை தொடர்ந்தும் ஒரு அடக்கு முறைக்குள் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளைத் தான் எடுத்துவருவதாக இந்த கட்டத்தில் நாங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது. ஏனென்றால் இன்று கோட்டபாய ராஜபக்ச, மகிந்த ராஜபக்ச, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க போன்ற இவர்களை பார்த்தால் ஒரு நிகழ்ச்சி நிரலுக்குள் தான் செயற்பட்டுக்கொண்டிருக்கின் றார்கள். தமிழ் மக்களுக்கான தீர்வு என்னும் பொழுது 13 ஐ அமுல்படுத்தி மாகாணசபையை கூட்டி மாகாணசபை தேர்தலை வைத்து அதிலே நடவடிக்கையை செய்யப்போனால் பொலிஸ் காணி அதிகாரங்களை கொடுக்கமாட்டோம் ஏனைய எல்லாவற்றையும் தருகின்றோம் என இவர்கள் போடும் பிச்சையிலே தமிழினம் வாழ வேண்டும் என்று இவர்கள் நினைக்கின்றார்கள். எனவே இதற்கு ஆளுங்கட்சியை பொறுத்தவரையிலே இவர்கள் தமிழ் மக்களினது அல்லது முஸ்லிம் மக்களினது ஆதரவு இன்றி ஒரு போதும் ஆட்சியமைக்க முடியாத ஒரு சூழல் உருவாகும் ஏனென்றால் தமிழும் முஸ்லிமும் மலையகமும் இணைந்தால் நிச்சயமாக எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து எமது இறைமைகளை பெற்றுக்கொள்ளக்கூடிய எமது நடைமுறைகளை பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சூழல் உருவாகும்.

ஏனென்றால் இன்று மலையக மக்களை பொறுத்தவரையிலே மனோகணேசன் ஆறுமுகம் தொண்டமனாறினுடைய மருமக்கள் அவரது பிள்ளைகள் எல்லோரும் அரசியல் செய்கின்றார்கள். ஆனால் ஒரு வடகிழக்கோடு இணைந்து அவர்கள் தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் அந்த அரசியலுக்கு அவர்கள் வருவதில்லை. வராத காரணத்தினால் இன்றும் தலை நசலாக ஆயிரம் ரூபாய் சம்பள பிரச்சனை போய்க்கொண்டிருக்கின்றது. அந்த பிரச்சனையை வைத்து இன்று மலையகத்திலே அரசியல் செய்துகொண்டிருப்பது போன்று வடகிழக்கிலே தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வு திட்டம் வழங்கமுடியாத சூழலை வைத்து இன்று வடகிழக்கிலே அரசில் செய்கின்றார்கள். முஸ்லிம்கள் தீவிரவாதிகள். தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் என்று அந்த அரசியலை செய்கின்றார்கள். எதை செய்தாலும் பௌத்த பேரினவாத பிக்குகள் அஸ்கரிய பீடத்திலே அவர்கள் புத்தம் சரணம் கச்சாமி என்று ஒரு பக்கத்தில் சொல்லிக்கொண்டாலும் மறு பக்கத்திலே இனவாத கருத்துக்களையும் இனவாத போக்கையுமே இவர்கள் கடைப்பிடிக்கின்றார்கள். எனவே இதில் மகிந்த ராஜபக்ச அவர்கள் ஒரு முன்னெடுப்பை முன்னெடுத்தாலும் கூட அல்லது ரணில் விக்ரமசிங்க ஒரு முன்னெடுப்பை முன்னெடுத்தாலும் கூட இவர்கள் அதற்கு ஒத்துவருவதில்லை ஆட்சியை குழப்பி ஆட்சிமாற்றம் ஒன்றை உருவாக்கி தங்களுக்கு தேவைப்படும் பொழுது ஆட்சியை மாற்றிக்கொள்வார்கள் ஆட்சியை மாற்றி தமிழ் தரப்பையும் கூட்டிக்கொண்டு கோட்டபாய ராஜபக்ச பிழையானவர் அல்லது பசில் ராஜபக்ச பிழையானவர் மகிந்த ராஜபக்ச பிழையானவர் என்று மக்களுக்கு காண்பித்து இன்று நீங்கள் பார்க்கும் பொழுது அதே பிழையைத் தான் தற்பொழுது ரணில் விக்ரமசிங்கவும் விட்டுக்கொண்டிருக்கின்றார். அவர் கடந்த காலத்திலே தமிழீழ விடுதலைப்புலிகளுடைய போராட்டத்தை எப்படி மௌனித்தார் பேச்சு வார்த்தைகளின் மூலம் எப்படி முறியடித்து கருணா பிரபாகரன் பிளவை ஏற்படுத்தினார் என்பது வரலாறு. இது தெரியாமல் தமிழ் தரப்புக்கள் இல்லை இருந்தாலும் தற்பொழுது நகர்த்தப்படுகின்ற நகர்வுகள் ஒவ்வொன்றும் இந்த பௌத்த தேரர்களை தூண்டிவிட்டு 13 வது திருத்தசட்டத்தை அமுல்படுத்தினால் அல்லது இத் திருத்த சட்டத்தின் ஊடாக தமிழ் மக்களுக்கான தீர்வை கொடுத்தால் இந்த நாடு உண்மையில் வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் உருவாக்கப்படும் பிரபாகரன் அவர்கள் நினைத்தது சரியாக நடக்கும்.

எனவே தமிழ் மக்களுக்கான வடகிழக்கு இணைந்த 13 ஆம் திருத்த சட்டத்திற்கு கீழ் அவர்களுக்கான காணி பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படக்கூடாது என்பதிலே அவர்கள் ஆணித்தரமாக இருக்கின்றார்கள். அந்த போக்கிற்கு இசைவாகவே சிங்கள தலைமைகளும் பிரதமரும் ஜனாதிபதியும் மாறி மாறி வந்த அரச தரப்பும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இது தான் இன்றைய யதார்த்த பூர்வமான அரசியலாக இருக்கின்றது. ஆகவே இதற்கு எதிராக தமிழ் தரப்பு என்ன செய்கின்றது. தமிழ் தரப்பு என்று கூறும்பொழுது இந்த அரசாங்கத்துடன் கிழக்கிலே ஒட்டிக்கொண்டிருக்கின்ற பிள்ளையான் அவரைப் பார்த்து கேட்கின்றேன். அதுபோன்று கருணா மற்றும் டக்ளஸ் போன்றோரை கேட்கின்றேன் ஏனைய கட்சிகளை கேட்கின்றேன் நீங்கள் இதற்கான முன்னெடுப்பை என்ன செய்கின்றீர்கள். மக்கள் மத்தியிலே சாணக்கியன் பிள்ளையான் அல்லது டக்ளஸ் தேவானந்தா போன்றோர் தவறுவிடுகின்றார்கள் இப்படி ஒவ்வொருவரும் விடுகின்ற தவறுகளை இங்கு சுட்டிக்காட்டிக்கொண்டு சிங்களவர்கள் அல்லது சிங்கள அரசியல் தலைமைகள் பௌத்த தேரர்கள் விடுகின்ற பிழைகளை உங்களால் ஏன் நேரடியாக சுட்டிக்காட்ட முடியாமல் இருக்கின்றது. அதாவது நீங்கள் கொலை கொள்ளை கற்பளிப்பு போன்ற விடயங்களில் ஈடுபட்ட அனைத்து ஆவணங்களும் தோண்டி எடுக்கப்படும் என்ற பயத்தில் இருக்கின்றீர்களா? அவ்வாறு நீங்கள் பயப்படத்தேவையில்லை ஏனென்றால் நீங்கள் மக்களுக்காக மக்களின் விடுதலைக்காக போராட வந்தனீர்கள். அன்று அரச கைக்கூலிகளாக இருந்து செயற்படுகின்ற பொழுது நீங்கள் அரசாங்கத்துடன் இணைந்து எத்தனையோ படுகொலைகளுடன் தொடர்புடையவர்களாகவும் இருக்கலாம். அப்படி அரசாங்கத்திற்கு எதிராக நீங்கள் தற்பொழுது செயற்பட்டால் உங்களது ஆவணங்களை கிளறுவார்கள். மறுபடியும் சிறை தண்டனையை அனுபவித்து தூக்கில் இடப்படவேண்டிய சூழல் உருவாகும் என்பதற்காக தமிழ் பேசி அரசியல் செய்கின்ற அரசியல்வாதிகளே இதற்கு பயப்படுகின்றீர்களா அல்லது வாழையடி வாழையடியாக இந்த மக்கள் தொடர்ந்தும் துன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்பது உங்களது எதிர்பார்ப்பாக இருக்கின்றது என்பது பற்றி நீங்கள் அனைவரும் கூடி தீர்மானிக்க வேண்டும். ஏனென்றால் மக்கள் அரசியல் கட்சிக்கு தலைமை வகிக்கின்றார்கள் என்ற வகையிலே நீங்கள் சொல்வதை மக்கள் கேட்கின்றார்கள். ஆனால் அவ்வாறு கேட்கின்ற பொழுது நீங்கள் மக்களுக்கான ஒரு தீர்வு திட்டத்தை கொடுக்க வேண்டும் இப்படியே 10. 15. 20 வருடங்கள் என இழுபட்டுக்கொண்டே செல்வதில் எந்த நியாயமும் இல்லை. 2009 ஆம் ஆண்டு யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் அரசியல் கட்சிகள் என்று கூறிக்கொள்பவர்கள் எல்லோரும் என்ன செய்துகொண்டிருக்கின்றீர்கள். தமிழ் மக்களுக்கான தீர்வுதிட்ட விடயத்திலே எதை பார்க்கின்றிர்கள்.



**தொடரும்...**

**இரணியன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

# மார்ச் 9 ஆம் திகதி உள்ளூராட்சிமன்ற தேர்தல்

பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க என்பது பலருடைய கருத்தாடலாக இருந்தாலும் தற்போதைய அரசியல் பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்ப தனது காய் நகர்த்தல்களை நகர்த்த ரணில் தயங்கவில்லை. பாராளுமன்றத்தில் தோல்வியுற்று பாராளுமன்றத்திற்குள் நுழைந்த ஒரேயொரு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களே. இவரது அரசியல் வகிபாகம் என்பது இக்காலகட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினராகி பின்னர் பிரதமராகி அதன் பின்னர் ஜனாதிபதியாகினார்.

தற்பொழுது முழு அதிகாரங்களையும் தனது கையில் வைத்திருந்தாலும் அந்த அதிகாரங்களை நிறைவேற்றுவதற்கு அந்தந்த துறைகளுக்கு அனுமதிகளையும் வழங்கியுள்ளார். அரசியல் குழப்பங்களை ரணில் அவர்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை அதனை ஒரு பொழுதுபோக்காகவே அவர் பார்க்கின்றார். அறகள போராட்டத்தின் பொழுது அமைச்சர்களின் 40 வீடுகள். ஜனாதிபதி செயலக முற்றுகை. பிரதமர் வீடு எரிப்பு. அடிதடி போராட்டங்கள். பாராளுமன்ற முற்றுகை இவற்றையெல்லாம் குறுகிய நாட்களுக்குள் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். அதன் பின்னர் எரிபொருள் தட்டுப்பாடு நிலவிய கட்டத்தில் அதனையும் ஒரிரு வாரத்தில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். நாடு மிக நெருக்கடிக்குள் சென்று கொண்டிருக்கும் பொழுது அதனை சீர் செய்துகொள்ளக்கூடிய அதிகாரம் மிக்க ஒரேயொரு தலைவராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் விளங்கினார் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

ஆனால் தமிழ் மக்களது தீர்வு திட்டம் என்ற விடயத்தில் மட்டும் அவரது கோர முகம் அவ்வப்போது வெளிப்பட்டது கருணா - பிரபாகரன் பிளவுகளை 2004 இல் ஏற்படுத்திய அதே ரணில் விக்ரமசங்க மகிந்த ஆட்சியை அசைக்க முடியாது 2/3 பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்தார்கள் யுத்தத்தை வென்ற கதாநாயகர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்க ஐக்கிய தேசிய கட்சி ஒரோயொரு ஆசனத்துடன் வரலாற்று தோல்வியை சந்திக்க மகிந்த குடும்பம் வெற்றி களிப்பின் மமதையில் நின்றுகொண்டிருக்க தனது கட்சியையும் தன்னையும் எவ்வாறு பலப்படுத்த வேண்டும் என்ற இராஜதந்திர நகர்வை நகர்த்தி அரசியல் செயற்பாடுகளில் இருந்தும். ஜனாதிபதி. பிரதமர் பதவிகளில் இருந்தும் மகிந்தவின் குடும்ப அரசியலை சின்னா பின்னமாக சிதறடித்த பெருமையும் அவரையே சாரும்.

தமிழ் தரப்பில் இருக்கின்ற ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் அவர்களை வைத்து தமிழ் தரப்பை ரணில் கையாளும் விதம் என்பது வெளிப்படையாக தெரிந்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் ரணிலின் எலும்புத்துண்டுக்கு அடிமையாகிய ஒருவராகவே இருக்கின்றார். அவர் ஒரு சட்டத்தரணியாக. அறிவாளியாக இருப்பது பாராட்டத்தக்கது ஆனாலும் தமிழினத்தை விற்றுப்பிழைக்கின்ற ஒரு துரோகத்தை தனது சுகபோக வாழ்க்கைக்காக அவர் செய்துவருகின்றார்.

இவ்வாறான நிலையில் தான் உள்ளூராட்சிமன்ற தேர்தல்ஒன்றுதற்பொழுது இடம்பெறவிருக்கின்றது. உள்ளூராட்சிமன்ற தேர்தல்களிலும் தனது வெற்றியை உறுதிப்படுத்திக்கொண்டு செல்வதற்காக இக்காலத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் கட்சிகளுக்கு இடையில் குழப்பங்களை உருவாக்கி அதனை ஒரு பொழுதுபோக்காக ரசித்துக்கொண்டிருப்பதும் இந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தான். ஆரிய கூத்து ஆடினாலும் காரியத்தில் கண் வைத்து செயற்படுகின்றார் ரணில் விக்ரமசிங்க அவர்கள்.

எனவே உள்ளூராட்சிமன்ற தேர்தலின் ஊடாக தமிழ் மக்களுக்கான தீர்வு எட்டப்படப்போவதில்லை என்பதனை நாம் உணர்ந்து கொண்டு மக்களுக்காக சேவை செய்கின்ற உணர்வாளர்களுக்கு எமது வாக்குகள் சென்றால் அது எமது பிரதேசம் வளர்ச்சியடைவதற்கு ஒரு சந்தர்ப்பமாக அமையும் என்பதே இன்றைய எமது பார்வையாக இருக்கின்றது.



## பல்துறை எழுத்தாளர் புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்




# கல்லறை பூக்கள்

*2019.11.1. திகதி இத்தாலியில் வித்தியாசமான நிமோணியாவால், மக்கள் பலர் உயிர் இழந்த போது, அந்த நாட்டு அரசாங்கம் பாராமுகமா இருந்தமையால், பின்னர் கொரோனாவினால் பாரிய பாதிப்புக்கு உள்ளாகியது. சீனாவில் 2019 இன் இறுதியில் தொற்று நோய் ஏற்பட்டு பலர் இறக்கும் போது, அமெரிக்க உட்பட பல நாடுகள் ஊதாசினப்படுத்தின. சீன மருத்துவ விஞ்ஞானிகள் கடும் ஆராய்ச்சியின் மூலம் (கொவிட் - 19) வைரஸினால், ஏற்பட்ட கொரோனா என்னும் தொற்று நோய் என அறிவித்தனர். அப்போதும் ஏனைய நாடுகள் தங்களின் பொருளாதாரத்தைத் தக்க வைப்பதிலையே முழு மூச்சாக செயற்பட்டன. இதற்கு இலங்கையும் விதி விலக்கல்ல. ஆனால், சீன அரசு விழித்துக்கொண்டது. தனிமைப்படுத்தல், கடுமையான ஊரடங்குச் சட்டம், அரசாங்கத்தின் பொது நல நோக்கு, வைத்தியர்களின் தியாகம், சுகாதார ஊழியர்களின் அர்ப்பணிப்பு முதலியவற்றால் உயிர் இழப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டு - கட்டுப்படுத்தப்பட்டு - நோய்த் தொற்று வீதம் குறைக்கப்பட்டமையால், சீன மக்கள் படிப்படியாக இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பினர். இன்று ஐரோப்பிய நாடுகளில் கொரோனா கோரத் தாண்டவம் ஆடுகின்றமையால், பல்லாயிரக் கணக்கானோர் உயிரிழந்தும் இலட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுமுள்ளனர்.*

*ஐரோப்பிய நாடுகளின் ஏகாதிபத்திய கொள்கையும் கவனமின்மையுமே இதற்கு காரணங்கள். எதிர் காலத்தில் இதனால், உலகில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படலாம். இலங்கை அரசாங்கமும் ஆரம்பத்தில் அசமந்தமான போக்கில் செயற்பட்டாலும். இடைப்பட்ட காலத்தில் உற்வேகத்துடன் செயற்பட்டது. பின்னர் தனது உற்வேகத்திலிருந்து சற்று சோர்வடைந்துள்ளது, தற்போது இலங்கையில் ஒற்றை எண்ணில் இறப்பு வீதமும் நூற்றுக்கணக்கில் தொற்று வீதமும் இருந்தாலும் சித்திரை மாதத்தின் இறுதியிலிருந்தே, கொரோனா உச்சக் கட்டம் கொள்ளத் தொடங்கியுள்ளது. எமது நாட்டைக் கொரோனாவிலிருந்து கட்சி பேதம், இனபேதம. வர்க்க பேதம், மத பேதம், அரசியல் பேதம் முதலியவற்றைத் தவிர்த்து. ஓரணியாக செயற்பட்டால், ஆயிரக்கணக்கான மரணங்கள், இலட்சக்கணக்கான பாதிப்புக்கள் ஏற்படாமல் தடுக்க முடியும்.*

*எமது நாட்டில் 1934 இல் மலேரியா தொற்றுஏற்பட்டு 1 இலட்சத்து 25 ஆயிரம் பேர் மரணித்தும் 15 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுமுள்ளனர். அப்போதைய இலங்கையின் முழு சனத்தொகை 55 இலட்சம். இப்போதைய சனத்தொகை 2.5 கோடி. எமது நாடு அப்போதும் இப்போதும் தங்கி வாழும் நாடு என்பதாலும் வல்லரசு நாடுகளே ஆடிப் போய்நிற்பதாலும் இலங்கை அரசாங்கம் இறுக்கமான கட்டுக்கோப்பை இன்னும் ஒரு மாதத்திற்காவது பேணாவிடின் விளைவுகள் அதிகமே. இப்போது அரசியல் கதைக்கும் சூழல் இல்லை. மக்களின் உணவுத் தேவையையும் சுகாதாரத் தேவையையும் முழுமையாக கவனிக்கும் நேரம். இந்த நேரத்தில் ஊடகங்களும் அரசியல் வாதிகளும் உண்மையான தகவல்களை வெளியிட வேண்டும். இலாப நோக்குடன், சுயநல கருத்துக்களை வெளியிட்டு, அப்பாவி மக்களைக் குழப்ப நிலைக்கு உள்ளாக்க வேண்டாம். இவ்வாறாக கொரோனா தொடர்பான ஊடக அறிக்கை ஒன்றைத் தாய்மொழிக் கலை மன்றத்தினால் வெளியிடப்பட்டு சமூக வலைத்தளங்களில் ஊசலாடியது. இதை அரசாங்கம் பொருட்படுத்தியதாக தெரியவில்லை. இலாப நோக்குடன் வெளிவரும் பத்திரிகைளும் இப்படியான தீர்க்கத்தரிசன ஊடக அறிக்கையை மக்கள் மத்தியில் கொண்டுபோனதாக தெரியவில்லை.*

*இலங்கை உள்நாட்டு யுத்தத்திலிருந்து ஒரு தசாப்தந்தான் முடிந்து, மக்கள் வழமையான வாழ்வியலுக்கு ஒரளவு திரும்பினர். இரண்டாயிரத்து பத்தொன்பதின் இறுதியில் சீனாவில் வைரஸ் தாக்கம் மெது மெதுவாக தொடங்கி, இரண்டாயிரத்து இருபதின் ஆரம்பத்தில் சீனாவில் உச்சம் கொண்டு, மூன்றாயிரத்துக்கு மேற்பட் உயிர்களை காவு கொண்ட போது, உலக நாடுகளே சீனக்காரனுக்கு வேணும். பாம்பு, பல்லி, அட்டை, பூச்சி, தோள், கரப்பான், தவளை என்று எல்லாத்தையும் தின்ற சனியன்கள் அவனுக்கு இதுவும் வேணும் இண்ணும். வேணும் என்று உலக மக்கள் யாவரும், சீன மக்களைக் காரணமில்லாமல் தங்களுக்கு ஒன்றும் வரப்போவதில்லை என்று கற்பனை சுயநலத்தில் அவர்களைத் திட்டித்தீர்த்தனர். வைத்தியர்கள் பலரையும் சுகாதரத் ஊழியர்கள் பலரையும் பழி கொடுத்து புதிய வைத்தியசாலைகள் பலவற்றை அமைத்து, ஹூவான் மாநிலத்தில் பல இலட்சக்கணக்கான மக்களை தனிமைப்படுத்தல் உத்தியைக் கையாண்டு சீன அரசு வைரஸ் தொற்றிலிருந்து தமது நாட்டைப் பாதுகாத்துக் கொண்டது.*

*ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பதியெட்டுக்குப் பின்னர் சோவியத் யூனியன் உடைந்து, சோசலிசம் குலைந்தது, அமெரிக்கா ஏக ஆதிக்கம் பெற்ற நாடாக மாறியது. அன்றிலிருந்து இரண்டாயிரத்து இருபது வரை அமெரிக்கா பல நாடுகளை சீரழித்து விட்டது. அவ்வாறான திட்டங்களில் ஒன்று தான் சீனாவில் வைரஸ் உருவாக்கம் என சீனா வெளிப்டையாக அமெரிக்காவைக் குற்றம் சுமத்தி வந்தது. அமெரிக்காவோ சீனா தான் தமது பொருளாதார இலாபத்திற்காக இந்த வைரஸ்சை ஐரோப்பிய நாடுகள் மீது ஏவி விட்டுள்ளது என்று குற்றம் சுமத்தியது. இந்த வாத பிரதி வாதங்கள் ஒரு பக்கம் இருக்க, இந்த வைரஸாலும் ஊரடங்குச் சட்டங்களாலும் உலகெங்கும் அதிக பாதிப்படைவது உழைக்கும் - அப்பாவி - மக்களே என்பது பளிச்சிட்டது. அதே மாதமும் அடுத்த அடுத்த மாதங்களிலும் உலகத்தை வைரஸ் ஆட் கொண்டது. சீனாவைவேடிக்கைபார்த்தவல்லரசுகள் அடியற்ற மரங்கள் போல மிரண்டு நின்றன. இலங்கையில் பாராளுமன்ற தேர்தலுக்கான ஆயத்தங்கள் வெகு சிறப்பாக நடைபெற்றது. சுய இலாபம் தேடும் அரசியல் வாதிகள் இன வாதம், மத வாதம், பிரதேச வாதம், வர்க்க வாதம் வியாபார வாதம், பெண்ணடிமை வாதம் பேசியவர்கள் இப்போது வைரஸ் வாதத்தை வைத்து அரசியல் செய்ய தயாராயாகி விட்டார்கள். ஊரடங்குச் சட்டத்தினால், ஏழைகள் பட்டினியால் சாகவும் வருத்தத்தினால் வருந்தவும் துணிந்து விட்டார்கள்.*

*இலங்கையில் ஒரு காலத்தில் மூன்று இனங்களும் ஒற்றுமையாக வாழ்ந்த காலம் மலையேறிவிட்ட நிலையில், பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அரசியற் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் கொரோனாவிற்கு எதிராக போராடுவதாகக் கூறி மஜயால வித்தைகள் காட்டின. ஊரடங்குச் சட்டத்தினால், சாதாரண மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. விசாய உற்பத்திகள் வீணடிக்கப்பட்டன. நீதிமன்றங்கள், வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள் எல்லாம் கால வரையறை இன்றி மூடப்பட்டுக்கிடந்தன. வீதியில் மனிதர்களின் நடமாற்றம் குறைந்தமையால் காட்டில் வாழும் விலங்குகளும் பறவைகளும் நாட்டிற்குள் வந்து உல்லாசமாக - சுதந்திரமாக - நடமாடின. வாகன ஓட்டங்களும் தொழிற்சாலைகளின் இயக்கமும் விமான ஓட்டங்களும் தடைப்பட்டமையால், சூழலின் வெப்பநிலை குறைவடைந்து தூய்மையான காற்று வீசியது. இயற்கை மனிதனை வெற்றி கொண்டு விட்டதைப் போல நிம்மதிப் பெரு மூச்சு விட்டது. விலங்குகளை விட மனிதர்களையே அதிகம் இந்த தொற்று நோய் பரவுவதாகவும் சில இடங்களில் விலங்குகளுக்கும் பரவியுள்ளதாக செவிவழியாகப் பல கதைகள் உலாவந்தன. சாத்திரங்களும் சமயங்களும் மக்களுக்குப் பொய்யாகத் தென்பட்டன. மனிதன் இவ்வளவு காலம் ஆடிய ஆட்டங்களை எண்ணியும் இப்போது அவனின் பரிதாப நிலையையும் பார்த்த, இயற்கையும் உயிரினங்களும் வெட்கம் - கவலை - கொண்டன. மனிதன், இயற்கையை அழித்ததின் விளைவுகளையும் உயிரினங்களைக் கொன்று தின்றதின் பாவத்தையும் உணர்ந்து கொண்டான். பகலும் இரவும் ஒரே மாதிரி அமைதியாகக் காட்சியளித்தன.*

தொடரும்...

# தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாற்றை திரும்பி பார்க்க வைக்கும் இலங்கையின் இன்றைய அரசியல்



30 ஆண்டு கால போராட்ட வரலாற்றை எடுத்துக்கொண்டால் நீண்ட தசாப்தங்கள் உருண்டோடி விட்டது. 4வது தசாப்தத்திற்குள் காலடி எடுத்துவைக்கும் தலைமுறையும் விடுதலைப்புலிகளின் போராட்டம் நியாயமானது என சிங்கள பேரினவாதிகளுடன் இணைந்து கூறும் நிலைமைக்கு மாற்றப்பட்டுள்ளது இலங்கையின் அரசியல். யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் இலங்கையின் கரையோரப்பகுதி தொடக்கம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பரப்புக்களும் பாதுகாக்கப்பட்டிருந்தது. ஒரு நாட்டில் கடல் வளம் ஏனைய நாடுகளால் சுரண்டப்படுமாயின் அந்த நாட்டிற்குள் அதி தீவிரமான போக்காளர்கள் தமது கால் தடத்தை பதித்து குறித்த நாட்டை குட்டிச்சுவராக்கும் நிலைமை உருவாகும். தற்பொழுது அந்த நிலைமையே உருவாகியுள்ளது. 2009 யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் அரங்கில் இருந்தும் அகற்றப்பட்டனர். ஏனைய இயக்கங்கள் சுதந்திரமாக இலங்கையின் அனைத்து பிரதேசங்களிற்குள்ளும் நடமாடித் திரியும் அதே நேரம் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு 2009 - இன்று வரை தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கம் என முத்திரை குத்தப்பட்டுள்ளது. அவர்களின் சீருடைகளோ அல்லது சின்னங்களோ அவர்களை ஊக்குவிக்கின்ற கட்டுரைகளையோ ஊடகங்களிலே பிரசுரிக்கக்கூடாது என்ற சட்டமும் அமுலில் கொண்டுவரப்பட்டது.

கொரோனா வைரஸினுடைய தாக்கம் அதன் பின்னரான நாட்டின் பொருளாதாரம் துறை சார்ந்த விடயங்களை செயற்படுத்துவதற்கு திரைசேரியில் பணம் இல்லாது தொடர்ந்தும் ஐரோப்ப நாடுகளையும் ஆசிய நாடுகளையும் நம்பி வாழுகின்ற ஒரு நிலைமை தொடர்ந்தும் காணப்படுகின்றது. விடுதலைப்புலிகளுடனான யுத்தம் இந்த நாட்டில் இடம்பெற்றுக்கொண்டிருந்த பொழுது 1990 காலப்பகுதியில் இருந்து 2000 வரை வன்னி பெருநிலப்பரப்பில் பொருளாதார தடை ஏற்படுத்தப்பட்ட பொழுதும் அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் அனைத்துவிதமான சௌபாக்கியங்களையும் அனுபவித்து வந்தனர். ஆனால் பொருட்களின் விலை மட்டுமே அதிகரித்து காணப்பட்டது. ஒரு லீட்டர் பெற்றோல் 3000 ரூபாயாகவும், ஒரு தேங்காய் 100 ரூபாயாகவும், பால் மா 1000 ரூபாயாகவும், சவர்க்காரம் 100 ரூபாயாகவும், கற்பூரம் 500 ரூபாயாகவும் விற்கப்பட்டது ஒரு காலம். சவர்க்காரத்தின் விலை அதிகரிக்கப்பட்ட காலத்தில் தான் பனம்பழத்தினால் ஆடைகளை தோய்ப்பது நடைமுறைக்கு வந்தது. இதில் விசித்திரமான விடயம் என்னவென்றால் ஆடைகளை தோய்த்து உலர விடும் பொழுது அதனை மாடு வந்து சாப்பிட்ட சம்பவங்களும் இடம்பெற்றது. இத்தனை துன்பங்களுக்கு மத்தியிலும் அப்பகுதி மக்கள் வாழ்ந்துவந்த பொழுதும் யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் நாட்டில் என்றும் இல்லாதவாறு பண வீக்கம் ஏற்பட்டுள்ளது.

யுத்தத்தை வென்ற துட்டகைமுனு என்று வெற்றிவாகை சூடிக்கொண்ட மகிந்த குடும்பம் அதே இனத்தால் 2022 காலப்பகுதியில் விரட்டியடிக்கப்பட்ட சம்பவங்களும் நடந்தேறியுள்ளது. அறகள போராட்டங்களில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்களும் தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட துரோகங்கள் தொடர்பிலும் கொலை செய்யப்பட்ட 35 ஊடகவியலாளர்கள் தொடர்பிலும் அறகள போராட்ட தடாகத்தில் இவ்விடயங்கள் அரங்கேறியிருந்தது. இவ் விடயமானது தமிழ், சிங்கள, முஸ்லிம் உறவுகளை பலப்படுத்துகின்ற ஒரு விடயமாக இருந்தாலும் சிங்கள பேரினவாதிகள் அந்த நட்புறவை தொடர்ந்தும் பேணிக்கொள்ள போவதில்லை என்பதும்தமிழ்மக்களிற்கானதீர்வுதிட்டம்என்ற விடயத்தில் பிரித்தாளும் தந்திரோபயத்தை மேற்கொள்ளும் நிலைப்பாடும் தற்பொழுது உருவாகியுள்ளது. குறிப்பாக வடக்கு கிழக்கு பிரதேசத்தில் இடம்பெற்று வருகின்ற அகிம்சை ரீதியிலான போராட்டங்கள் இடம்பெறுகின்ற பொழுது அவர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டம் பாய்கின்றது. பொலிகண்டியில் இருந்து பொத்துவில் வரையிலான போராட்டத்தில் பங்குபற்றிய ஏழு நபர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள். அதே நேரம் 13வது திருத்த சட்டத்தை எதிர்த்து போராடிய பல்லாயிரக்கணக்கான பௌத்த தேரர்கள் மிதவாதிகள் இன்னமும் கைது செய்யப்படாத நிலையில் ஒரு சிலர் கைது செய்யப்பட்டு மீண்டும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். யுத்தம் முடிவடைந்த நிலையில் தமிழ் மக்களுக்கான அரசியல் ரீதியான தீர்வு திட்டத்தையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். 13வது திருத்த சட்டம் ஒரு ஆரம்ப புள்ளியே, இதில் தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் கிடைக்கப்போவதில்லை என்று கூறினாலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள காணி பொலிஸ் அதிகாரம் நடைமுறைப்படுத்தப்பட்டாலே தமிழ் மக்களுக்கான அரைவாசி பிரச்சனைகள் தீர்க்கப்பட்டிருக்கும். தமிழினத்தின் விடுதலைக்காக போராடி தமது உயிர்களை ஆகுதியாக்கிய 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகளின் தியாகத்தை கொச்சைப்படுத்தும் வகையில் இன்றைய அரசியல் தலைமைகள் நடந்துகொள்ளும் விதம் கவலைக்குரியது.

தமிழ் மக்களுக்கான சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே போராளிகள் உயிர் தியாகம் செய்தார்கள். தென்னிலங்கை அரசியலை பொறுத்தவரை மாறி மாறி வந்த அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் தமது அரசியல் உறுதிப்பாட்டை நிலை நிறுத்துவதற்காக மாற்று வழிகளை கையாண்டுவருகின்றனர். அந்த மாற்றுவழிகளில் ஒன்றாக இலங்கையில் வாழக்கூடிய சிறுபான்மையை வைத்து தமது அரசியல் ஸ்திர தன்மையை ஏற்படுத்துவதேயாகும். போராட்ட வரலாற்றின் தந்திரோபாயங்கள் என்பது காலத்திற்கு காலம் மாறுபட்டதொன்று. பூகோள அரசியல் வரலாற்றில் குறித்த நாடுகள் இலங்கை நாட்டுக்குள் அத்துமீறி செயற்படும் விதமானது மென்மேலும் தமிழ் மக்களினது போராட்டத்தை மலுங்கடிக்கும் ஒரு செயற்பாடாகவே அமைகின்றது. தென்னிலங்கை சக்திகளை எதிர்க்கக்கூடிய பலம் காலத்திற்கு காலம் தமிழர் தரப்பில் வேறுபட்டதாகவே இருந்து வந்தது. தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை பேசிய ஊடகவியலாளர்கள் 35 பேர் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் மகிந்த அரசாங்கத்தில். அல்பட் துரையப்பா தொடக்கம் லக்ஸ்மன் கதிர்காமன் வரை மிக முக்கியம் வாய்ந்த அரசியல் தலைவர்கள் 172 பேர் இலங்கை அரசாலும் ஆயுததாரிகளாலும் சுட்டுக்கொள்ளப்பட்டார்கள். இதனையடியொட்டி 2009 போர் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் மக்களுக்கான ஒரு அரசியல் தீர்வு கிடைக்கும் என்ற நோக்கில் தமிழ் தரப்பு தொடர்ந்தும் குரல் எழுப்பி வருகின்றது. சம்பந்தன், ஆனந்த சங்கரி, மாவை சேனாதிராஜா போன்றவர்களின் அரசியல் காலம் முடிவடையப்போகும் நிலையில் அடுத்த தலைமுறைக்கு இக்கட்சியை எடுத்துச்செல்வதற்கான புதிய தலைவர்களை உருவாக்குவதில் இவர்கள் தவறிழைத்துள்ளார்கள். வயது முதிர்வு என்பது மாறாட்டங்களை கொண்டு வருவது என்பது இயல்பு. அந்த வயது முதிர்விலும் பதவிகளோடு வாழ வேண்டும் என்று ஆசைப்படுவது தான் தவறு அவர்கள் ஒரு கட்சிக்கு ஆலோசனையாளர்களாக இருக்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. 30 வருட கால போராட்டம் என்பது ஒரு சாதாரண விடயமல்ல. இப் போராட்டத்திற்காக பலர் சிறை சென்று வந்த வரலாறுகளும் இருக்கின்றன. அனைத்து போராட்ட களங்களிலும் வேறுபட்டது தான் தமிழீழ விடுதலைப்புலிகளது போராட்டம். போராட்டம் முடிவடைந்து ஒரு தசாப்தத்தை கடந்த நிலையிலும் இன்னமும் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் பற்றி பேசப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதற்கு காரணம் சிங்கள பேரினவாதிகளின் அடக்கு முறை என்பதாகும். ஒரு நாட்டில் இரு சட்டம் என்ற நிலையே தற்பொழுது காணப்படுகின்றது. அரசாங்கம் தான் செய்யும் தவறுகளை மூடிமறைத்து சர்வதேசத்திற்கு ஒரு பூச்சாண்டி காட்டுகின்றது. இந்த பூச்சாண்டி காட்டும் நேரத்தில் தமிழ் தரப்புக்களையும் பேச்சு வார்த்தை என்ற போர்வையில் அழைத்துக்கொள்ளுகின்றது. அல்லாவிட்டால் எதிர்கட்சி பதவி 13 ஐ தருகின்றோம் என கூறுகின்றது. 13 + 19 + 20 அதையும் தாண்டி தமிழ் மக்களுக்கான தீர்வு என்கின்றது அரசாங்கம். தொடர்ந்தும் ஒரு ஏமாற்று அரசியலையே வெளிப்படுத்தி நிற்கின்றது. காலத்தின் தேவை கருதி தமிழ் தரப்புக்களின் ஒன்றிணைவு கட்டாயமாக்கப்படுகின்றது.

13 வது திருத்த சட்டத்தில் ஒன்றும் இல்லையென கூறுபவர்கள் உள்ளூராட்சிமன்ற தேர்தல்களிலும் மாகாண சபை தேர்தல்களிலும் போட்டியிடக்கூடாது. ஆனால் சொல்வது ஒன்று செய்வது மற்றொன்றாக இருக்கின்றது. இந்த அரசியலில் இருந்து விடுபட வேண்டும் மக்கள் தாங்கள் கூறுவதை நம்ப வேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டம் என்பது ஒவ்வொரு நாடுகளிலும் வேறுபட்ட தன்மையை கொண்டுள்ளது. மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரும் என கூறியவர் தான் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் மறைந்த தியாகி திலீபன். பிராந்திய வழியில் தனது போராட்டத்தை நடத்தி ஐந்து அம்ச கோரிக்கையுடன் இந்திய இராணுவம் இந்த நாட்டில் இருந்து வெளியேறுவதற்கும் முக்கிய பங்கு வகித்தார். அதன் பின்னர் தொடர்ந்தும் வந்த போராட்ட களங்களை பார்க்கின்ற பொழுது இலங்கையின் வடகிழக்கு பகுதிகளில் 25 க்கும் மேற்பட்ட வெற்றிகரமான தாக்குதல்கள் நடத்தப்பட்டது. காப்புறுதி கூட்டுத்தாபனம், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம், ஜோசப் முகாம், அநுராதபுர விமான நிலையம், மத்திய வங்கி இவ்வாறு பல்வேறு தரப்பட்ட முக்கியம் வாய்ந்த தாக்குதல்களை அரசாங்கத்திற்கு எதிராக தொடுத்ததன் மூலம் பல இழப்புக்கள் ஏற்பட்டது. அதன் பின்னர் பல்வேறுபட்ட பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றன.

குறிப்பாக சமாதான காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளை பிரித்தாளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதனாலே கருணா பிரபாகரன் பிளவு ஏற்பட்டது. இதன் காரணமாக விடுதலைப்புலிகள் விடுதலைப்புலிகளுக்குள்ளேயே மோதிக் கொண்டன. பலமாக இருந்த விடுதலைப்புலிகள் பலவீனமடைய இதுவும் ஒரு காரணமாக அமைந்தது. ஆயுத முனையில் அரசாங்கத்தை அடிபணிய வைத்த தமிழர் தரப்பு இன்று தமிழ் அரசியல் தலைமைகளினால் கை கட்டி வாழவேண்டிய சூழல் உருவாகியிருக்கின்றது. சிங்கள பேரினவாதிகள் யாருக்கு எதிராக தொடர்ந்தும் செயற்படுகின்றார்கள் என்பதை தமிழ் தரப்பு உணர்ந்துகொள்ள வேண்டும். அடுத்த தலைமுறையேனும் ஒரு ஆயுத போராட்டத்திற்குள் கொண்டு செல்லாது அரசியல் ரீதியான தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு தமிழ் தரப்புகள் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். மீண்டும் தமிழினத்திற்கான நெருக்கடி நிலைமைகள் ஏற்பட இவ்வாறான ஆயுத போராட்டம் இருந்தால் மட்டுமே அதற்கான தீர்வு கிடைக்கும் என அறகள போராட்டத்தில் மக்கள் கூக்குரல் இட்டார்கள். மற்றமொரு அறகள போராட்டம் இந்த நாட்டில் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்களும் இருக்கின்றன. எனவே அரசாங்கம் இவ் விடயங்களை கருத்தில் எடுத்து தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வு திட்டத்தை நோக்கி செல்வதற்கு அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே இன்றைய எமது பார்வையாக இருக்கின்றது.

**நெற்றிப்பொறியன்**

# உள்ளூராட்சி தேர்தல் மன்றில் போட்டியிடும் 50வீதமானவர்கள் கொலை,கொள்ளை, கற்பழிப்போடு தொடர்புடையவர்கள்




இம்முறை இடம்பெறுகின்ற உள்ளூராட்சிமன்ற தேர்தலில் குறிப்பாக வடகிழக்கில் அரசியல் காவாளிகளை தமிழ் தரப்பு களமிறக்கியிருப்பது என்பது வேதனைக்குரியது. இவர்களுள் கந்து வட்டிக்கு பணம் கொடுப்பவர்களும் கொலை. கொள்ளை. கற்பழிப்பு. ஆள் கடத்தல் போன்ற சம்பவங்களில் இழுபட்டுள்ளவர்களுமே நூற்றுக்கு 65 சதவீதம் இத் தேர்தல் களத்தில் களமிறக்கப்பட்டுள்ளனர். பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்ற பழமொழிக்கமைய இவர்களின் இவ்வாறான செயற்பாடுகள் என்பது பற்றி கட்சிகள் தம்மை பரிசீலனை செய்துகொள்ள வேண்டும். உள்ளூராட்சிமன்ற தேர்தல் என்பது மாகாண சபை தேர்தல். பாராளுமன்ற தேர்தல் போன்றல்ல. அந்த அந்த பிரதேசங்களின் அபிவிருத்திகளை நோக்காக கொண்டு செயற்படுகின்ற சபைகளாகும். கடந்த காலங்களில் ஆயுத முனைகளில் பலர் உள்ளூராட்சிமன்றங்களில் போட்டியிட்டனர். இன்று அயுத போராட்டம் மௌனிக்கப்பட்ட நிலையில் கீரைக்கடைக்கு எதிர்க்கடை என்பதுமால்போல் கட்சிகள் மனம் போன போக்கில் புதிய புதிய கட்சிகளை உருவாக்கி உள்ளூராட்சி மன்ற தேர்தல் என்றால் என்ன என்பது பற்றியும் தெரியாதவர்களும் தற்பொழுது களமிறக்கப்பட்டிருக்கின்றனர். இதன் முக்கிய நோக்கம் வாக்குகளை சிதறடித்து சின்னாபின்னமாக்குவதே ஆகும்.

அரசாங்க கட்சிகளுடன் தமது சுகபோக வாழ்க்கைக்காக தமிழினத்தின் வாக்குகளை சிதறடிக்கும் நடவடிக்கைகளை தமிழ் தரப்பு செய்து வருவது என்பது மிகவும் தமிழினத்தை பாதிப்படையச்செய்யும் ஒரு விடயமாகும். உள்ளூராட்சிமன்ற தேர்தலிலோ அல்லது மாகாணசபை தேர்தலிலோ பாராளுமன்ற தேர்தலிலோ போட்டியிடுவதாக இருந்தால் அவர்களது தராதரமும் மக்கள் சேவையும் பார்க்கப்பட வேண்டியதொன்றாகும். பணம் கொடுத்து விருது பெற்றவர்கள் அனைவரும் மக்கள் செல்வன் என்றும். ஓரிரு உதவிகளை மக்களுக்கு செய்து விட்டு மக்கள் செல்வன் என்றும். துறைசார் விடயங்களில் அனுபவம் இல்லாதவர்கள் டாக்டர் பட்டம் என்றும் பணம் கொடுத்து விருதுகளை பெற்றவர்களும் இன்று உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியிட இருப்பதை அவதானிக்க முடிகின்றது. மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் குறித்த கட்சிகள் மக்களை தெரிவு செய்வது என்பது மிகவும் அவசியமானதொன்று. திருடனுடைய கையில் சாவியை கொடுக்கின்ற ஒரு நடவடிக்கையையே தமிழ் தரப்புக்கள் செய்து வருகின்றன. ஒரு சில கட்சிகள் மட்டும் தமக்கான தாயகம். தேசியம். சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடுகளுடன் தொடர்ந்தும் பயணிக்கின்றன. நிலைமைகள் மாற்றப்பட வேண்டும் போராட்ட களம் இருந்த காலகட்டம் வேறு தற்பொழுது இருக்கும் காலகட்டம் வேறு.

தற்போதைய சூழலில் தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் என்னும் பொழுது அது சர்வதேசத்தை நோக்கிய ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது. தற்பொழுது தேர்தல் நடக்குமா இல்லையா என்பது ஒரு கேள்விக்குறியாக இருக்க உள்ளூர் குழுக்களிடையே தற்பொழுது போட்டிநிலைமை காணப்படுகின்றது. அது மட்டுமன்றி வாய் தர்க்கங்களும் கவளிகரம் செய்கின்ற சம்பவங்களும் தொடர்ந்தும் அரங்கேறிவருகின்றது. கட்சிக்கு போடுகின்ற வாக்குகளின் அடிப்படையிலே அப் பிரதேசத்தில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள். குறித்த பிரதேசத்தில் கட்சி வெல்லுமாக இருந்தால் மட்டுமே அதனோடு ஆட்சி அமைக்க முடியும். தமிழ் தரப்பில் பிரதானமாக இருக்கக்கூடிய தமிழ் தேசிய கூட்டமைப்பு பிளவுபட்டதன் அடிப்படையில் ரெலோ. புளொட். ஈ.பி.ஆர்.எல்.எப். தமிழ் தேசிய கட்சி. ஜனநாயக போராளிகள் கட்சி போன்றன ஒரு கூட்டாக இணைந்து DTNA என்று போட்டியிடுகின்றன. இந்த சந்தர்ப்பத்திலும் இவர்களது கூட்டு என்பது தொடரும் என்று கூறிவிட முடியாது. இதுவொரு தேர்தல் கூட்டாக மட்டும் செயற்படுகின்றது என்றே கூறவேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் கட்டமைப்பு என்பது இந்த நாட்டில் தடை செய்யப்பட்டதொன்று அப்படியிருக்க ஜனநாயக போராளிகள் DTNA கட்சியுடன் இணைந்து செயற்படுவது என்பது மக்கள் மத்தியில் சந்தேகத்தை எழுப்பியுள்ளது. ரெலோ கட்சியில் இருந்து பிரிந்துசென்றவர் தான் சிறிகாந்தா. எனவே ஏனைய கட்சிகளுடைய செயற்பாடு என்ன என்பது பற்றி மக்களுக்கு தெரியும் அதற்கான ஆதரவும் இருக்கின்றது. தேர்தல் களத்தில் போட்டிடுகின்ற கட்சி தலைவர்களின் கருத்து இவ்வாறாக இருக்கின்றது.



**தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா :** தமிழ் தேசிய கூட்டமைப்பு பிளவுபட்டுவிட்டது என்ற கருத்து தவறானது. தனித்தனியே உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியிடுவோம் என்ற தீர்மானம் ஏற்கனவே எடுக்கப்பட்டது. ஒரு சிலர் தமது சுயலாப அரசியலுக்காக இதனை தவறாக பயன்படுத்துகின்றார்கள். நான் இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது. உள்ளூராட்சிமன்றங்கள் வடக்கு கிழக்கில் இணைந்து செயற்படுகின்ற ஒரு நிலைமை உருவாக்கப்படும் தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற வகையில் தனித்தனியே நாம் கேட்டுக்கொண்டாலும் எந்தவொரு கட்சித் தலைவருக்கு எதிராகவும் நாம் பிரச்சாரம் செய்யப்போவதில்லை. பிரச்சாரம் செய்யக்கூடாது என வலியுறுத்தி எனது கட்சி உறுப்பினர்களிடம் விரயமாக கேட்டுக்கொண்டுள்ளேன். உள்ளூராட்சிமன்ற நிறைவின் பின்னரே ஒவ்வொரு கட்சிகளும் தாம் என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றார்கள் என்பது பற்றி தம்மை சுய பரிசோதனை செய்துகொள்ளமுடியும். கட்சி பிளவு என்பது தவறான கருத்து.



**ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் :** சுமந்திரனின் அண்மைக்கால செயற்பாடுகள் அனைத்தும் ஆயுத கட்சிகளை தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து ஓரம் கட்டுகின்ற ஒரு செயற்பாடாகவே இருக்கின்றது. தமிழரசுக் கட்சியின் தலைவர் இவர்களை கட்டுப்படுத்த தவறிவிட்டார் என்றே நான் கருதுகின்றேன். அரசியலில் நேற்று முளைத்த காளான்கள் போன்று செயற்படும் சுமந்திரன் எமக்கு அறிவுரை கூற முடியாது. ஆயுத போராட்டத்தின் வலி என்னவென்று அறியாதவர் தான் சுமந்திரன். உள் ஒன்று வைத்து புறம் ஒன்றை பேசுகின்றார். தமிழ் தேசிய கூட்டமைப்பு பிளவுபடவில்லை என்று கூறுகின்றார். பிளவுபடவில்லை என்றால் நாம் ஏன் ஐந்து கட்சிகள் இணைந்து உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியிட வேண்டும் குறிப்பாக சொல்வதானால் TNA யில் இருந்து தமிழரசுக் கட்சியே விலகியுள்ளது. நாம் விலகவில்லை. எனவே மக்களாகிய நீங்கள் இதுவரை காலமும் எமக்கு அளித்த ஆதரவுக்கு நன்றி நீங்கள் எம் மீது கொண்டுள்ள நம்பிக்கை விசுவாசத்தை எமது இறுதி மூச்சு உள்ளவரை காப்பாற்றுவோம். யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது மக்களாகிய உங்களுக்கு தெரியும். எமது ஆயுத போராட்டம் என்பது பதவிக்காகவோ பணத்திற்காகவோ புறப்பட்டவர்கள் அல்ல எமது இனம் படுகொலை செய்யப்பட்ட அக்காலகட்டங்களில் இடம்பெற்ற வடுக்களே எம்மை ஆயுதம் ஏந்த வைத்தது. நாம் இன்றுவரை களத்தில் நிற்கின்றோம். தமிழரசுக் கட்சியின் ஒரு சிலரின் கருத்தை நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.



**புளொட் கட்சியின் தலைவர் சித்தார்த்தன் :** தமிழ் தேசிய கூட்டமைப்பு பிளவடைந்தது என்பது உண்மை தான். இதற்கு இவர்கள் டெக்னிக்கல் ரீசன் ஒரு காரணம் என்று கூறுகின்றார்கள். நான் கேட்பது என்னவெனில் கட்சிகள் பிளவுபட்டு தேர்தலில் கேட்பது தான் டெக்னிக்கல் ரீசனா? நாம் ஒருபோதும் கூட்டமைப்பில் இருந்து விலகவில்லை தற்பொழுதும் நாம் கூட்டமைப்பாகத்தான் இருக்கின்றோம். தமிழரசுக் கட்சி தான் அதிலிருந்து விலகியுள்ளது. ஒரு விடயத்தை இவ்வாறு செயற்படுத்த முடியாதா? என்று எம் கட்சி தலைமைகளுடன் கூடி கதைத்துவிட்டு எமது கருத்துக்களை ஒருபுறத்தில் புறம் தள்ளி தாம் நினைத்தது போன்று முடிவுகளை எடுக்கின்றார்கள். TNA கட்சிக்கு பொறுப்பாக இருக்கும் இரா. சம்பந்தன் அவர்கள் ஒரு கேள்வியை கேட்கின்றார். தமிழரசுக் கட்சியை இல்லாமல் செய்வது தான் உங்கள் நோக்கமா? என்று. தனித்தனியே கேட்டுவிட்டு மீண்டும் வாருங்கள் என்பது அவரது கருத்தாடலாக இருக்கின்றது. இதற்கு பின் நாம் எவ்வாறு தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவிடமோ கூட்டமைப்பின்தலைவர் இரா. சம்பந்தன் உடனோ சமரசம் பேசுவது. இவ்வாறான ஒரு நிலையில் நாம் தேர்தலை எதிர்கொள்ளுகின்றோம். அன்றிலிருந்து இன்று வரை எமது இனத்தின் விடுதலைக்காக தொடர்ந்தும் போராடிக்கொண்டே இருக்கின்றோம். மக்களாகிய நீங்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதும் யார் பிழை செய்தார்கள் என்பது பற்றியும் உள்ளூராட்சிமன்ற தேர்தலின் பின்னர் கூறிக்கொள்ளமுடியும்.



**ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் :** தமிழரசுக் கட்சி தான் நினைத்த முடிவுகளை எடுப்பது இன்று நேற்றல்ல. தனக்கு வேண்டுமானால் ஒரு கட்சியை உள்ளே வைத்துக்கொள்வதும் அல்லது வெளியே அனுப்புவதும் அவர்கள் துரோகிகள் என்ற பட்டத்தை சூட்டுவதிலும் அவர்கள் பெயர் போனவர்கள். ஆயுதம் ஏந்தியவர்கள் வன்முறையாளர்கள் என்று கூறும் தமிழரசுக் கட்சி இவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து வெளியேறினால் தமிழரசுக் கட்சி தூய்மையான கட்சி என நாம் நினைத்துக்கொள்ள முடியும் என சிந்தித்து செயற்படுகின்றார்கள். அப்படியல்ல 2001 ஆம் ஆண்டில் இருந்து 2020 நடந்த தேர்தல்களில் எல்லாம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளி கட்சிகள் இணைந்தே போட்டியிட்டனர். தேர்தல் பிரச்சாரங்களின் போதும் ஒரே மேடையில் பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆனால் அப்பொழுதும் ஆயுதம் ஏந்திய கட்சிகள் துரோகிகள் என்றே தமிழரசுக் கட்சிகள் பல இடங்களில் கூறியது. இருப்பினும் தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு வீட்டு சின்னம் என்ற காரணத்தால் பங்காளி கட்சிகள் ஒவ்வொன்றும் தமிழரசுக் கட்சியுடன் தொடர்ந்தும் பயணித்தன. கூட்டாக பயணித்த இந்த கட்சிகள் தற்பொழுது தனித்தனியே கேட்கின்ற ஒரு நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டதன் விளைவாகவே ஐந்து கட்சிகள் கூட்டிணைந்து TNA ஆக பயணிக்கின்றோம். யார் கூட்டமைப்பை பிளவுபடுத்தினார்கள் இதன் சூத்திரதாரி யார் என்பது பற்றி மக்களாகிய உங்களுக்கு தெரியும்.




இதிலும் குறிப்பாக சிறிகாந்தா தலைமையிலான தமிழ் தேசிய கட்சி. வேந்தன் தலைமையிலான ஜனநாயக போராளிகள் ஆகிய இருவரும் TNA யில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். ரெலோ. புளொட். ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய மூன்று கட்சிகளும் தம்மை பலப்படுத்திக்கொள்வதற்காக இவ்விரு கட்சிகளையும் இணைத்துக்கொண்டிருக்கலாம் என பரவலாக எதிர்பார்க்கப்படுகின்றது. இவர்கள் வெற்றிபெறுவார்களா அல்லது வாக்குகளை சிதறடிக்க செய்வார்களா என்பது பற்றி பொருத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் இக்கட்சிகளின் நிலைப்பாடும் இவ்வாறே இருக்கின்றது. எனவே மக்கள் யார் ஜனநாயகவாதிகள். ஜனநாயகமாக செயற்படக்கூடிய கட்சிகள் யார்?. மக்கள் மனதை வென்றெடுக்கக் கூடியவர்களாகவும் கல்விமான்களாகவும் செயல்திறனாகவும் இருக்கின்றார்களா? என்பதை தீர்மானித்து தாங்கள் தாங்கள் பிரதேசங்கள் வெற்றிகரமாக ஒழுங்குமுறையில் மிளிர்ந்து காணப்பட யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை மக்களாகிய நீங்கள் தீர்மானித்துக்கொள்ள வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயம்.

**“திருடனுடைய கையில் சாவியை கொடுக்கின்ற ஒரு நடவடிக்கையையே தமிழ் தரப்புக்கள் செய்து வருகின்றன.”**

**துரியோதரன்**






# தமிழ் தேசிய மக்கள் முன்னணி 13ஐ ஏன் எதிர்க்கின்றது? பௌத்த பேரினவாதிகள் ஏன் எதிர்க்கின்றார்கள்?

தமிழ் தேசிய மக்கள் முன்னணி 13 ஆம் திருத்த சட்டத்தை நீக்க வேண்டும் என்று எந்த கட்டத்திலும் சொல்லவில்லை. 13 ஆம் திருத்தம் தமிழ் மக்களின் இனப்பிரச்சனைக்கு தீர்வு இல்லை அதுவொரு ஆரம்ப புள்ளியாக கூட கருத முடியாது என்று தான் அதை சொல்லுகின்றோம். 13 ஆம் திருத்தம் தமிழ் மக்களின் இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வு என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட ஒரு விடயமல்ல. தமிழ் மக்களுடன் பேசி தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் கொண்டுவரப்பட்ட ஆவணம் அல்ல அதனால் தான் நாங்கள் அதையொரு பேச்சு பொருளாக கருதுவதற்கு தயாராக இல்லை. தமிழ் மக்களின் இனப்பிரச்சனைக்கு தீர்வு சம்பந்தமாக 13 ஆம் திருத்தம் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறுவதற்கு இடமே இல்லை அவ்வளவு தான் நாங்கள் சொல்வது. அதை நீக்க சொல்லியோ நாங்கள் ஒன்றும் சொல்லப்போவதில்லை. அது தமிழ் மக்களினது விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்படாத ஒரு விடயம். இதே விடயத்தை சிங்கள தரப்பு எதிர்கின்றது இதை எங்கள் மீது ஒரு குற்றம் சுமப்பதற்கும் பலர் விரும்பிக்காட்டும் ஒரு விடயம் ஏனென்றால் சிங்கள தரப்பும் இதை எதிர்க்கின்றது. நீங்களும் இதில் ஒரு பிரயோசனமும் இல்லை என்று சொல்லுகின்றீர்கள் என்ற கோணத்தில் ஏனென்றால் சிங்கள இனவாதிகள் அல்லது அதி தீவிரவாத நிலைப்பாட்டை கொண்ட சிங்கள பௌத்த பேரினவாத நிலைப்பாட்டை கொண்ட தரப்புக்கள் இதில் பல இருக்கின்றது இது தமிழினத்திற்கு வழிவகுக்கப்போகின்றது அந்தளவிற்கு பிரயோசனமற்றது.

எனவே தமிழனுக்கு இதை கொடுக்க கூடாது என்ற நோக்குடன் இருக்கின்றார்கள் இன்று சுட்டிக்காட்டி நாங்களும் இதை எதிர்க்கின்றோம் என்றால் அதில் ஏதோ பிழை இருக்கின்றது தானே என்று. ஆனால் சிங்கள தரப்பு 13 வது திருத்தத்தை எதிர்ப்பதற்கான பிரதான காரணம் அவர்கள் இந்தியாவிற்கு எதிர் நீங்கள் மிக தெளிவாக யார் யார் 13 வது திருத்தத்தை எதிர்க்கின்றார்கள் என்று பார்த்தால் உங்களுக்கு மிகத் தெளிவாக விளங்கும் அவர்கள் இந்தியாவிற்கு எதிர். இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிரானவர்கள். எனவே அவர்கள் கருதுகின்றார்கள் 13 வது திருத்தத்தை எதிர்த்து அதை முற்றுமுழுதாக இல்லாமல் செய்வதன் ஊடாக ஒட்டுமொத்த இந்திய இலங்கை ஒப்பந்தத்தையே இல்லாமல் செய்யலாம் என்ற நம்பிக்கையில் தான் அவர்கள் 13 வது திருத்த சட்டத்தை எதிர்ப்பதற்கான உண்மையான நோக்கம். ஏனென்றால் அதிகாரம் எதுவும் கிடையாது அவர்கள் மதிக்கின்ற உச்ச நீதிமன்றமே மிகத் தெளிவாக சொல்லியிருக்கின்றது 13 வது திருத்தத்திற்குள்ள அதிகாரத்திற்கு இடமே இல்லை ஒற்றையாட்சி இருக்கும் வரை அதிகாரங்கள் அனைத்துமே கொழும்பில் தான் குவிந்திருக்கும் என்ற விடயத்தை உச்ச நீதிமன்றமே மிகத் தெளிவாக சொல்லியிருக்கும் இடத்தில் இது 13 இல் எதுவுமே கிடையாது என்ற விவாதத்திற்கு அப்பாற்பட்ட விடயம். ரணில் விக்ரமசிங்க இது எல்லாவற்றையும் நன்றாக விளங்கிக்கொண்டிருக்கின்றார் முட்டாள் இல்லையே. நல்லதொரு அனுபவசாலி. மிகத் திறமையான ஒரு அரசியல்வாதி எனவே அவருக்கு தெரியும் உண்மையான தமிழன் உரிமைக்காக போராடும் தமிழன் எதிர்ப்பான் என்றால் அதில் ஒரு பிரயோசனமும் இல்லை. அதே நேரம் சில தீவிரவாதிகள் விசேசமாக இனவாதத்தில் ஊறிப்போயிருக்கக்கூடியவர்கள் இந்தியாவிற்கு எதிராக இந்தியா இந்த தீவில் வந்து ஆதிக்கம் செலுத்தக்கூடாது என்றவொரு தீவிர நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றவர்களும் இதை எதிர்ப்பார்கள் எனவே இரண்டு தரப்பிற்கும் இடையில் பாரிய மோதலை ஏற்படுத்தி தான் அதை வேடிக்கை பார்த்து பொருளாதார விடயத்தில் நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கக்கூடிய இந்த சூழலில் மக்களை அந்த கோணத்தில் மோத வைத்து விட்டு தான் பொருளாதார விடயங்களில் தனக்கு இல்லாத அதிகாரங்களை கொண்டு வந்து சொத்துக்களை விற்று தான் விரும்பிய வல்லரசுகளிடம் ராஜபக்ச எப்படி சீனாவிடம் விற்றாரோ ரணில் அதே போன்று மற்றைய தரப்பிற்கும் விற்றுக்கொண்டு போவதற்குரிய பாதையை வடிவாக கிளியர் பன்னிக்கொடுப்பதற்கு வேறு வேறு விடயங்களில் மக்களை தங்களது எதிர்ப்பை முடக்கிவைத்து தான் கொண்டுசெல்லக்கூடிய நிகழ்ச்சி நிரலில் சாதிக்க நினைப்பது தான் உண்மையான நோக்கம்.

எனவே தமிழ் தேசிய மக்கள் முன்னணி தமிழ் மக்களிடம் மட்டுமல்ல சிங்கள மக்களிடமும் இந்த பிரச்சனைகளை உண்மையிலே தீர்க்க விரும்புகின்ற இனவாதமற்ற இந்த இலங்கைத் தீவில் வாழும் அத்தனை இனங்களுக்கும் சொந்தமாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கக்கூடிய மக்களிடம் நாங்கள் மீண்டும் மீண்டும் சொல்லுகின்ற விடயம் இவ்வாறான பிரயோசனமற்ற எந்தவிதத்திலும் பிரச்சனைக்கான தீர்வு காண்பதற்காக உதவி செய்யப்போகாத 13 ஆம் திருத்தம் போன்ற விடயங்களிலே முடங்கிப்போயிருக்காமல் இதைத் தாண்டி தமிழ் மக்களின் உண்மையான பிரச்சனையை தீர்ப்பதற்கான நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க வேண்டும் அதே போன்று அப்படிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு இணங்குவதன் ஊடாகத்தான் இலங்கையில் தேவைப்படுகின்ற உண்மையான மாற்றுதல்களை செய்ய முடியும். உதாரணமாக தமிழ் மக்களினது இனப் பிரச்சனைகளை தீர்த்தால் மட்டும் தான் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சமஷ்டி ஆட்சிமுறை தமிழ் தேசியம் அங்கீகரிக்கப்படும் ஒரு தீர்வுக்கு இணங்கினால் மட்டும் தான் உங்களது இராணுவ கட்டமைப்பை நீங்கள் குறைக்கலாம். ஏனென்றால் தமிழ் மக்களுடன் சமாதானத்திற்கு ஒரு புரிந்துணர்விற்கு போனால் மட்டும் தான் இராணுவம் இந்தளவு தூரத்திற்கு பலமான ஒரு கட்டமைப்பாக இந்த தீவில் இருக்க வேண்டிய தேவை இருக்காது. நீங்கள் தமிழர்களுடன் ஒரு புரிந்துணர்விற்கு வராமல் முஸ்லிம்களுடன் மற்றும் மலையக மக்களுடன் ஒரு புரிந்துணர்விற்கு வராமல் இந்த இராணுவத்திற்கு நீங்கள் இன்னும் கூடிய நிதியை ஒதுக்கி இந்த நாட்டினுடைய அபிவிருத்திக்கும் அனைத்து இன தேச மக்களினது முன்னேற்றத்திற்கும் தேவைப்படும் நிதியை செலுத்தாமல் இராணுவத்திற்கு செலுத்தி இறுதியில் எரித்து அழிக்கப்படும் நிலைக்குத் தான் தொடர்ந்தும் தள்ளப்படுவீர்கள்.

இந்த நாட்டினுடைய வரலாறு 75 வருடங்களாக பொருளாதாரத்தில் இன்று பூச்சியத்திற்கு வந்திருப்பதன் பிரதான காரணம் தேவைப்படுகின்ற விடயங்களில் அக்கறை செலுத்தாமல் இனவாதத்திற்காகவும் வேறு வேறு இனங்களுடைய தேசத்திற்கான உரிமைகளை அங்கீகரிக்காமல் வெறுமனே தங்களுடைய கைக்குள் மட்டும் இந்த தீவை வைத்திருக்க நினைத்த பேரினவாதமும் இனவாதமும் தான் காரணமாக இருந்திருக்கின்றது என்பதனையும் நாங்கள் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். தீர்வு சம்பந்தப்பட்ட பேச்சு வார்த்தை என ரணில் விக்ரமசிங்க கூறிய விடயம் உண்மையில் இந்த தமிழ் மக்களுக்கான இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக அல்ல என்பது தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆரம்பத்திலிருந்து சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. இனப்பிரச்சனைக்கான தீர்வைப் பற்றி உண்மையிலே பேசுவதாக இருந்தால் தமிழ் மக்கள் 36 வருடங்களுக்கு முன்னரே நிராகரித்த விடயத்தை தூக்கிப்பிடிப்பதில் அர்த்தம் இல்லையே. தமிழ் மக்கள் ஒற்றையாட்சிக்கு எதிராக 75 வருடங்களாக ஆணையை கொடுத்திருக்கின்ற இடத்தில் அந்த ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு இருக்கலாம் என கூறுவதில் எந்த பயனும் இருக்க முடியாதே. அப்படியொரு தீர்வை எட்டமுடியாதே எனவே இது தீர்வு சம்பந்தப்பட்ட பேச்சு வார்த்தைகள் அல்ல. நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டதைத்தான் தற்பொழுதும் கூறுகின்றேன். பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு இடையில் நடந்த பேச்சு வார்த்தையின் ஊடாக இந்த பிரச்சனையை தீர்ப்பதாக சொல்லிய விடயம் ஒரு பம்மாத்து. அவருக்கு என்ன தேவைப்பட்டது அந்த காலகட்டத்தில் தான் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு நபர். தன்னுடைய கட்சி மக்கள் தூக்கி எறிந்துவிட்டது. தன்னுடைய கட்சி பாராளுமன்றிற்கு வருவதற்கே வழியில்லாமல் இருந்தது. அப்படிப்பட்ட கட்சியை சார்ந்த ஒரு நபர் இன்று 2 வருடங்களிற்கு முன்பு ஆட்சிக்கு ஏற்றிய மக்கள் அந்த தரப்பை நிராகரித்து ஜனாதிபதியும் பிரதமரும் வீட்டுக்கு ஓடவேண்டி வந்த நிலையிலே பாராளுமன்றத்திலும் இருக்கின்ற அவருடைய உறுப்பினர்கள் ஓடுவதற்கு விரட்டியடிக்கக்கூடிய நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருந்த ஒரு சூழலில் தான் அவர்கள் அனைவருமாக சேர்ந்து இந்த முறை தேர்தலுக்கு போகாமல் எப்படியாயினும் ரணில் விக்ரமசிங்கவை நியமித்தால் அவருக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை. பலமில்லை அவர் தங்களில் தங்கியிருக்க வேண்டிய நிலை உருவாகும் அதை வைத்துக்கொண்டு தாங்கள் ஏதோவொரு வகையில் பிழைத்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் நியமித்தார்கள்.

ஆகவே மக்கள் ரணில் விக்ரமசிங்கவை அங்கீகரிக்கப்போவதில்லை. அங்கீகரிக்கவில்லை என்ற நிலைமையை உலகம் நிதி உதவி வழங்க வேண்டிய உலகம் அதைப்பார்த்து எந்தவொரு உதவியையும் செய்யப்போவதில்லை என்ற பயத்தால் அவருக்கு ஏதோவொரு வகையில் மக்கள் அங்கீகரித்திருக்கின்றார்கள் அல்லது ஏதோவொரு வகையில் தனது ஆட்சிக்கு அங்கீகாரம் இருக்கின்றது என்பதை காட்டுவதற்கு தன்னோடு போட்டியிட அரசியலில் இருக்கக்கூடிய தரப்புக்கள் தான் அழைக்கும் ஒரு சர்வகட்சி மாநாட்டில் வந்து அமர்ந்தால் அதுவொரு அங்கீகாரம். அந்த அங்கீகாரத்தின் ஊடாக மட்டும் தான் வெளிநாட்டு நிதிகளை ஏதோவொரு வகையில் பெற்றுக்கொள்ளலாம் என்ற விளக்கத்தில் தான் ரணில் விக்ரமசிங்க மிக கெட்டித்தனமாக சர்வஜன மாநாட்டை அழித்தவர். அதற்கு நிபந்தனை இல்லாமல் போய் இந்த இனத்தையே விற்ற தமிழ் தரப்புக்கள் தான் மூலகாரணம். ஏனென்றால் தமிழர்களின் இனப்பிரச்சனை தீர்வு என்று தான் சர்வகட்சி மாநாடே நடத்தினார் அதை வைத்து தான் தனக்கு அங்கீகாரம் இல்லாத நிலைமையை மாற்றியமைத்து சர்வதேச மட்டத்திலிருந்து நிதி பெறுவதற்கான ஒரு சூழலை உருவாக்குகின்றார். குறைந்தது எங்களுக்கு பேரம் பேசும் வாய்ப்பு இருக்கின்றது என்பதை விளங்கிக்கொண்டு நிபந்தனையை போட்டு ஒற்றையாட்சிக்குள் இருக்கக்கூடிய 13 ஐ பிரயோசனமற்ற 36 வருடங்களிற்கு முன்னரே அடியோடு எடுத்த எடுப்பிற்கே நிராகரித்த இந்த 13 ஆம் திருத்தத்தைப் பற்றி பேசாமல் அதைத் தாண்டிய ஒரு புள்ளியில் இந்த பேச்சு வார்த்தையை ஆரம்பித்துள்ள வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கக்கூடிய நிலைமையை முற்றிலும் அழித்தது இந்த தமிழ் அரசியல் கட்சிகள் என்று சொல்லக்கூடாது கும்பல். இவர்கள் தான் இதை நாசமாக்கியது துரதிர்ஷ்டவசமாக இதை விளங்கிக்கொள்ளாத சிங்கள மக்களும் இந்த தமிழ் தரப்புகள் தேவையில்லாமல் போய் அந்த பேச்சு வார்த்தைக்கு கொடுத்த அங்கீகாரத்தை வைத்துக்கொண்டு தாங்கள் தூக்கி எறிவதற்கு என்று பார்க்கும் ஜனாதிபதிக்கும். ஆட்சிக்கும் உயிர் கொடுக்கும் வேலையைத்தான் இறுதியில் இந்த பேச்சு வார்த்தைக்கு போய் கலந்துகொண்ட அனைத்து தரப்புக்களும் செய்துகொடுத்திருக்கின்றது என்பது தான் இன்றைய பரிதாபமான நிலைமை.

நாங்கள் ஆரம்பத்திலே குறிப்பிட்டோம் இதற்கு முன்னர் நான் சொன்ன கருத்துக்களுடன் அதை தொகுத்து பார்க்கலாம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியை தவிர்ந்த ஏனைய அனைத்து தமிழ் என்ற பெயரிலே இயங்கிக்கொண்டிருக்கின்ற அரசியல் தரப்புக்கள் ஒற்றையாட்சிக்குள் இருக்கக்கூடிய 13 ஆம் திருத்தத்தை ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். எனவே ஒற்றையாட்சிக்குள் இருக்கக்கூடிய 13 ஆம் திருத்தம் தான் இன்று தமிழ் அரசியலினுடைய பிரதான அரசியல் நீரோட்டமாக மாற்றப்பட்டிருக்கின்றது. அல்லது மாற்றப்படுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட சூழலிலே இதே தரப்புக்கள் மக்களிடம் பொய் சொல்வது எப்படியென்றால் தாங்கள் தாயகம் தேசியம் சுயநிர்ணய கோட்பாடுகளுடன் வந்து நேர்மையாக இருப்பதாகவும் அது தான் இறுதி இலக்காக இருந்தாலும் கூட இந்த 13 ஆம் திருத்தம் என்பதை ஒரு ஆரம்ப புள்ளியாக மட்டும் தான் பார்ப்பதாகவும் இதை ஒரு தீர்வாகவும் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தான் அப்பட்டமான பொய்யை சொல்லி மக்களை ஏமாற்றப்பார்க்கின்றார்கள்.

பல்கலைக்கழக மாணவர்கள் சட்டம் விளங்கிக்கொண்டால் தெரிந்திருக்கும் ஒற்றையாட்சிக்குள் இருக்கின்ற இந்த 13 ஆம் திருத்தத்தையோ அல்லது அதற்குள் இருக்கக்கூடிய வேறு ஏதோ யோசனைகளையோ ஆரம்ப புள்ளியாக ஏற்றுக்கொண்டாலே அவர்கள் சொல்லுகின்ற பொங்கு தமிழ் பிரகடனம் முடிவிற்கு வரும். இன்று ரணில் விக்ரமசிங்க அவர்கள் பேச்சு வார்த்தைக்கு அழைத்திருக்கின்றார் அழைத்த இடத்தில் தான் 13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக ஒரு கருத்தை கூறி சமஷ்டிக்கு இடமே இல்லை ஒற்றையாட்சியை தாண்டி பயணிப்பதற்கு இடமே இல்லையென முற்றுப்புள்ளியை வைத்திருக்கின்றார். அவர் ஒரு முற்றுப்புள்ளியை வைத்திருக்கின்ற இடத்தில் அவரோடு பேசித்தான் நீங்கள் ஒரு தீர்வை எட்டப்போகின்றீர்கள். அவர் ஒற்றையாட்சி என்று ஒரு முற்றுப்புள்ளியை வைத்திருக்கின்ற இடத்தில் நீங்களும் போய் அவர் விரும்பும் ஒற்றையாட்சிக்குள் இருக்கின்ற ஒரு விடயத்தை வலியுறுத்தும் பொழுது அதைத்தான் தீர்வாக இறுதியில் முடிவிற்கு வரப்போகின்றது என்பதை சாதாரண அரசியலில் அக்கறை கொள்ளக்கூடியவருக்கு விளங்கும் தானே. இதை ஏன் பல்கலைக்கழக மாணவர்கள் விளங்கிக்கொள்ளவில்லை என்பது தான் கேள்வி.

**தொடரும்...**



# “காலங்கள் கடந்து வாழும் அம்பிகாபதி – அமராவதி காதல்”

காதல் என்பது அன்பின் வெளிப்பாடு. உணர்வு, உணர்ச்சி, பரவசம், தவிர்ப்பு இப்படி இனம் புரியாத மனித இயல்புகளின் கூட்டு அடையாளமாகக்கூடக் கருதலாம். அது மௌனமாய் பிறப்பெடுத்து மென்மையாய் பரிணமித்தாலும் சில நேரங்களில் துயரக் கதையாகி விடுவதையும் மறுக்க முடியாது. ஆனாலும்,உலகில் எண்ணற்ற காதல், காதலர்களின் மறைவுக்குப் பின்னர் காலங்கள் பல கடந்தும் மக்களின் மனங்களில் உயிர் ஓவியமாக நிலைத்து காவியங்களாக வாழ்ந்து வருவது வியப்பை அளிக்கிறது. இதுதான் காதல் எவ்வளவு வல்லமையுடையது என்பதை பறைசாற்றும் அடையாளம்.

உலகில் பல காதல் கதைகள் இருக்கலாம். அவைகளில் சில காதல் கதைகள் மனித குல வாழ்வியல் வரலாறில் உலக அதிசயங்களில் ஒன்றாகவும், படைப்பிலக்கியங்களாகவும் உயிர்பெற்று சிதைக்க முடியாத அங்கமாக மாறியுள்ளது. சலீம் -அனார்கலி, விக்டோரியா - ஆல்பர்ட், ஷாஜஹான் - மும்தாஜ், ட்ரிஸ்டன் - சோல்ட், நெப்போலியன்-ஜோஸ்பின், பாரீஸ் - ஹெலன், கிளியோபட்ரா - மார்க் ஆண்டனி, ரோமியோ - ஜூலியட் என புகழ்பெற்ற பல காதல் கதைகள் வரிசையில் அம்பிகாபதி-அமராவதி காதல் கதையும் அடங்கும். தமிழக மண்ணில் சமகாலம் வரையில் காதலுக்கு எதிரான வன்மங்கள், கௌரவ குற்றங்கள் நிகழ்வது வேதனையளிப்பதாகவே உள்ளது. இவை காதல் குறித்த புரிதல் குறைபாடு மற்றும் மதம்,சாதியம், பொருளாதாரம், அரசியல் சார்ந்த பாகுபாட்டின் அடிப்படையில் அரங்கேறுகிறது. சில நேரங்களில் காதல் என்ற போர்வையில் நிகழும் மாறுபட்ட, வரம்பு மீறிய சம்பவங்கள் காதலுக்கான மரியாதையை கேலிக்கையாக்கி சிதைக்கவும் செய்வதை மறுக்க முடியாது.

ஆனால், இவைகளின் நடுவே, இதே மண்ணில் உருவாகி நூற்றாண்டுகள் பல கடந்தும் மக்களின் மனதில் மதிப்பு மிக்கதாக வாழும் காதல் காவியத்தின் கதையை நாம் அறிந்துக்கொள்வது அவசியமானது. தமிழ் இலக்கியத்தின் ஊடே நம்மால் அறியப்படும் கம்பர், தன் அழகுநடை எழுத்தால் இன்றளவும் வியக்க வைக்கும் கம்பராமாயணத்தை எழுதி அளித்தவர். இவரிடையே காணப்பட்ட ஆற்றல், கவித்திறன் காரணமாக கவிச் சக்ரவர்த்தி என்று அழைக்கப்பட்டுகிறார். இவரது மகன்தான் அம்பிகாபதி. "கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவி பாடும்" என்ற முதுமொழிக்கு ஏற்ப அம்பிகாபதியும் கவி பாடுவதில் ஆற்றல் பெற்றவனாக இருந்தான். கம்பர் வாழ்ந்த காலத்தில் ஆட்சிசெய்த சோழ மன்னன் குலோத்துங்கச் சோழனின் மகள் அமராவாதி. இருவருக்கும் மலர்ந்த காதல் கதைதான் இன்றைக்கும் மக்கள் மனதில் நிலைத்து நிற்கிறது. அந்த காலத்தில் ஆசிரியரின் வீடுகளுக்குச் சென்று கல்வி கற்பது வழக்கமாக இருந்துள்ளது. கல்வியில் சிறந்து விளங்கிய கம்பரின் வீட்டுக்கு தன் மகள் அமராவதியை கற்றிட அனுப்பி வைத்தான் சோழ மன்னன். அமராவதியும் நாள்தோறும் கல்வி கற்க கம்பர் வீட்டுக்குச் சென்று வருவாள். ஒரு நாள் கம்பர் வெளியூர் சென்றுவிட்ட நிலையில், வீட்டில் இருந்த கம்பரின் மகன் அம்பிகாபதி, அமராவதிக்கு கல்வி கற்றுக்கொடுத்துள்ளார். அப்போது அம்பிகாபதியிடம் காணப்பட்ட திறன் அமராவதியை ஈர்த்திருக்க வேண்டும். அதேபோல அம்பிகாபதிக்கும் அமாராவதி மீது விருப்பம் ஏற்படுகிறது. சமகாலத்தில் எழுதபட்ட ஒரு புதுக்கவிதையில்:

“விழிகளும் விழிகளும் அடித்துக்கொண்டன விழுந்து நொறுங்கியது இதயம்” என்று சொல்வதைப்போல இருவருக்கும் இடையே காதல் மலர்கிறது. காதல் இருவரையும் அடிக்கடி வெளியில் சந்திக்க செய்யும் அளவுக்கு மாறுகிறது. இந்த விஷயம் மன்னனின் கவனத்துக்கு அரைகுறையாக சென்றுவிடுகிறது. இதனால் மன்னனும் அமராவதி மீது ஒருகண் வைத்து கவனிக்கிறான். ஒரு நாள் கன்னிமாடத்தில் நின்றிருந்த அமராவதியின் பார்வையில் அந்த வழியாகச் சென்ற அம்பிகாபதி தென்படுகிறான். அமராவதி பார்த்ததை அம்பிகாபதியும் கவனிக்கிறான். காதலர்கள் பார்த்துக்கொண்டால் எப்படி இருக்கும் அப்படியொரு காட்சி. அம்பிகாபதியும் தன் கவி திறத்தால் அவளை பாடலாகவும் பாடிவிடுகிறான். இவர்களுக்குள் நடக்கும் இந்த ஊடலை மன்னனும் கவனித்துவிட, சந்தேகம் வலுக்கிறது. பெரிய இடத்து பெண்ணைப் பார்க்கும் இளைஞனுக்கு என்ன நடக்குமோ அதுதான் அம்பிகாபதிக்கும் அன்று நடந்தது. அவனை அழைத்த மன்னன் கண்டிக்கிறான். ஆனால், அம்பிகாபதி எதையோ சொல்லி மடைமாற்றுகிறான். ஆனாலும், மன்னன் திருப்தி அடையவில்லை. இந்த நிலையில், ஒரு நாள் அரண்மனையில் புலவர்களை அழைத்து சிறப்பித்த மன்னன் அவர்களுக்கு விருந்து படைக்கிறான். இந்த விருந்தில் கம்பருடன் அவரது மகனும் அழைக்கப்பட்டிருந்தான். அப்போது, புலவர்களுக்குத் தன் மகளான அமராவதியையும் சில பதார்த்தங்களை பரிமாறி உபசரிக்கச் சொல்கிறான் மன்னன். விருந்தின்போது, தன் மனம் கவர்ந்த நாயகி ஒரு கின்னத்தில் வைத்து உணவு பரிமாறும் காட்சி அம்பிகாபதியை வெகுவாக ஈர்த்தது. தன்னையும் மறந்த அம்பிகாபதி, அமராவதியை மனதில் நினைத்து கவிதை ஒன்றை படைக்க முனைகிறான். இட்ட அடி நோக எடுத்த அடி கொப்பளிக்க வட்டில் சுமந்து மருங்கசைய - என்ற வரியை அம்பிகாபதி பாடினான். இதைக் கேட்டதும்,மன்னனுக்கு பொருள் புரிந்தால் என்ன நடக்குமோ என்று துடித்துபோன கம்பர், பாடலின் பொருளை மாற்றி சமாளிக்கும் எண்ணத்தோடு கம்பர் அவசரம் அவசரமாக ஒருபாடலை பாடுகிறார்: கொட்டிக்கிழங்கோ கிழங்கென்று கூறுவாள் நாவில் வழங்கோதை வையம் பெறும்' என்று முடிக்கிறார். தெருவில் கொட்டிக்கிழங்கை கூவி விற்றுக்கொண்டு செல்லும் பெண்ணை அம்பிகாபதி கூறியதைபோல பொருள்கொள்ளும்படி சமாளித்து பாடலில் கூறுகிறான் கம்பன். ஆனாலும் மன்னனுக்கு சந்தேகம் வலுத்துப்போனது. கம்பன் வார்த்தைகளை அவன் பொருள்படுத்தவில்லை. பிரச்னைக்குத் தீர்வு காணவும், அம்பிகாபதியை தண்டிக்கவும் துடித்தான் மன்னன்.


அவைக்களப் புலவரான ஒட்டக்கூத்தரிடம் ஆலோசிக்கிறான் மன்னன். அந்த காலகட்டத்தில், கம்பனுக்கும் ஒட்டக்கூத்தருக்கும் இணக்கமில்லாத சூழல் இருந்து வந்தது. ஒரு வழியாக தீர்வு காண்பதற்கான வழிமுறை கையாளப்பட்டது. ஒருநாள் அரசபையில் புவலர் பெருமக்கள் கூடிய அரங்கில் சிற்றின்பம் தவிர்த்து நூறு பாடல்களை அம்பிகாபதி பாடிவிட்டால் அமராவதியை மணக்கலாம். தவறினால் மரண தண்டனை அளிக்கப்படும் என்று மன்னன் அறிவித்தான். இந்த போட்டி அம்பிகாபதிக்கு இப்போது உள்ள இளைஞர்கள் கூறுவதைப் போல "லட்டு திண்பதைப்போல" என்று எண்ணினான். அதேநேரத்தில் நூறு பாடல்களை பாடி முடித்து மன்னன் விரும்பாத காதல் பாடலையும் கூடுதலாக பாடிவிடுவது என அவா கொண்டான் அம்பிகாபதி. மகனின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்ட கம்பனும் போட்டியின் நிபந்தனைகளுக்கு சம்மதித்தான். பாடல்களை பாடிவிடுவது எளிது. ஆனால் அவற்றை எண்ணிக்கொண்டே பாடுவது தடுமாற்றத்தைக் கொடுத்துவிடும் என்ற தயக்கம் அம்பிகாபதிக்கு இருந்தது.

இந்த விஷயத்தில் உதவ முன்வந்த அமராவதி, தன் தோழி மூலம் ரகசியமான திட்டத்தை அம்பிகாபதிக்கு தெரியப்படுத்திவிடுகிறாள். ஒரு வழியாக போட்டி தொடங்குகிறது. திரை மறைவில் அமர்ந்திருந்த அமராவதி வைத்திருந்த பூக்களை ஒவ்வொரு பாடலின்போதும் ஒரு மலராக எடுத்து இடம் மாற்றி வைத்து பாடிய பாடல்களின் எண்ணிக்கையை உறுதிபடுத்துகிறாள். அம்பிகாபதி நூறு பாடல்களைம் பாடிவிட்டதாக நினைத்த அமராவதி தன் காதலன் வெற்றி பெற்றுவிட்ட மகிழ்ச்சியோடு நூறு பாடல்களையும் பாடிவிட்டதற்கான சைகையை அம்பிகாபதிக்கு காட்டினாள். இதையறிந்த அம்பிகாபதி, நூறு பாடல்களை பாடிவிட்ட பெருமையில் ஆனந்தமடைந்தான். மேலும்,அவன் நினைத்ததைப்போல தன் காதலியை மனதில் வைத்து காதல் பாடல் ஒன்றையும் பாடி முடிக்கிறான். ஆனால், சபையில் இருந்த ஒட்டக்கூத்தர் எழுந்து 99 பாடல்களை மட்டுமே பாடியதால் அம்பிகாபதி தோற்று விட்டதாக அறிவித்தார். அப்போது அரங்கமே அதிர்ந்து போனது. நூறு பாடல்களையும் பாடிய பிறகு எப்படி தவறாகும் என்ற கேள்வி எழுந்தது.

போட்டியின் தொடக்கத்தில் பாடிய முதல் பாடல் கடவுளுக்கானது. அது காப்பு செய்யுள். அவை கணக்கில் வராது. மாறாக கடைசிப் பாடல் இளவரசி அமராவதியின் அழகை வர்ணித்து காதல் பாடலாக பாடியது நிபந்தனையை மீறிய செயல் என ஒட்டக்கூத்தர் விளக்கமளித்தார். அவசரப்பட்டு விட்டோமோ என்று எண்ணிய அம்பிகாபதி துடித்துப்போனான். போட்டியின் நிபந்தனை விதிகள் மீது புரிதல் இல்லாமல் அமராவதி அவசரப்பட்டு காப்பு பாடலையும் சேர்த்து நூறு என எண்ணிகையாக்கியதை நினைத்து துடித்துப்போனாள். கம்பன் தன் வாழ்நாளில் அடையாத கலக்கத்தை அடைந்தான். சபையில் இருந்தவர்களில் சிலரைத் தவிர பலர் பரிதாபபட்டனர். ஆனால், எதுவும் அம்பிகாபதியின் தரப்புக்கு ஆதரவாக இல்லை.

ஏற்கனவே திட்டமிட்டது போல அம்பிகாபதி கொலை களத்துக்கு கொண்டுச்செல்லப்பட்டான். மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அரண்மையில் இருந்து ஓடிய அமராவதி, கொல்லப்பட்டுக்கிடந்த தன் காதலன் அம்பிகாபதியின் உடல் மீது விழுந்து கதறி அழுது உயிரை மாயித்துக்கொண்டாள். இவ்வாறாக அம்பிகாபதி - அமராவதியின் காதல் கதை முடிகிறது. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் இந்த காதல் கதையில் வரும் சாயல்கள் யாவும் சம காலத்திலும் வெவ்வேறு பின்பங்களாக தொடர்வதுதான் வேதனையளிக்கிறது.

ஒரு நாட்டை ஆளுகிற மன்னனின் மகளை, அதுவும் ஒரு புலவனின் மகன் காதலிக்க அனுமதிப்பதா என்ற பாகுபாட்டின் கீழ் உருவான வன்மத்தின் அடையாளமாகக்கூட கருதலாம். அம்பிகாபதிக்கு நேர்ந்தது இன்றைக்கும் எங்கோ ஓர் இடத்தில் நேர்ந்திடும் கௌரவக் கொலை போன்றதாகக் கூட இருக்கலாம். ஆனால், எது எப்படியோ காலம் பல கடந்தும் மக்களிடம் கதையாக, காப்பியமாக, படைப்புகளாக இன்றைக்கும் அம்பிகாபதி - அமராவதியின் காதல் வாழ்கிறது.



“விழிகளும்
விழிகளும்
அடித்துக்கொண்டன
விழுந்து
நொறுங்கியது
இதயம்”

# பிராந்திய செய்திகள்

## டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்த கல்முனையில் வேலைத்திட்டம் முன்னெடுப்பு

கல்முனை மாநகர உறுப்பினர் சந்திரசேகரம் ராஜனின் வழி காட்டலின் கீழ் விளையாட்டு கழகங்கள் இணைந்து கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் வீட்டுக்கு வீடு சென்று குப்பை கூழங்கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் போது சுமார் 100 க்கும் மேற்பட்ட வீடுகளில் தேங்கி காணப்பட்ட திண்மக்கழிவுகள் மாநகர சபையின் உதவியுடன் அகற்றப்பட்டதுடன் நுளம்பு பரவலில் இனம் காணப்பட்ட பல பிரதேசங்களும் விளையாட்டுக்கழக வீரர்களால் சுத்தம் செய்யப்பட்டன. இதன் போது நியூ ஸ்டார் விளையாட்டு கழகம், சைனிங் விளையாட்டு கழகம் உள்ளிட்ட அப்பகுதி இளைஞர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்குடனும் டெங்கு நோயின் தாக்கத்தை இப்பிரதேசத்தில் கட்டுப்படுத்தும் முகமாகவும் பொலிஸ் நிலையத்தை அண்டிய பகுதிகளில் உள்ள குப்பைகூழங்கள் காடு மண்டிய இடங்கள் யாவும் துப்பரவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





## போக்குவரத்து அமைச்சரின் அதிரடி உத்தரவு

வடக்கு புகையிரத பாதை அபிவிருத்திப் பணிகளின் போது இடம்பெற்றதாக கூறப்படும் முறைகேடுகள் குறித்து உடனடியாக விசாரணை நடத்துமாறு போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். வவுனியாவிற்கும் அனுராதபுரத்திற்கும் இடையிலான இந்த வீதியின் நிர்மாணப் பணிகள் இந்திய நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அதே நிறுவனம் மேலும் பல நிறுவனங்களுக்கு துணை ஒப்பந்தங்களை வழங்கியுள்ளது. துணை ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனங்கள் புகையிரத திணைக்களத்தில் பணிபுரியும் சில அதிகாரிகள் மற்றும் தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்களுடையது எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில், இத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட உபகரணங்களும் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பள்ளத்தில் கவிழ்ந்த பேருந்து - 28 பேர் வைத்தியசாலையில்



இரத்தினபுரியில் இருந்து பாலாபத்தல நோக்கி சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 28 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து இந்துருவ பெரிய வளைவுக்கு அருகில் அன்று(10) பிற்பகல் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். காய மடைந்துள்ளவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## வேன் மோதியதில் தந்தையும் மகளும் பலி

கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் தந்தையும் மகளும் உயிரிழந்துள்ளனர். கட்டுகஸ்தோட்டை ஜம்புகஹபிட்டிய வீதியில் சென்று கொண்டிருந்த வேன் மோதியதில் வீதியில் பயணித்த தந்தையும் மகளும் உயிரிழந்துள்ளனர்.

பொல்கொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய நபரும் அவரது 14 வயது மகளும் விபத்தில் உயிரிழந்துள்ளனர். விபத்து தொடர்பில் வேன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.



## நிலக்கரிக்கு நிதி நெருக்கடி

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் உற்பத்திக்கு தேவையான நிலக்கரியை கொள்வனவு செய்வதற்கு போதிய நிதி ஒதுக்கீடுகள் இதுவரை கிடைக்கவில்லை என இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி மாதத்தில் 22 பில்லியன் ரூபா தேவைப்படுவதாக அதன் தலைவர் ஷெஹான் சுமனசேகர தெரிவித்தார். ஆனால் அதற்காக 2.5 பில்லியன் ரூபா மாத்திரமே கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.


## வெல்லவாய, புத்தல பகுதியில் மீண்டும் நிலநடுக்கம்

மொனராகலை மாவட்டத்திற்குட்பட்ட வெல்லவாய, புத்தல பகுதியில் மீண்டும் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

குறித்த நிலநடுக்கம் 2.3 ரிச்டர் அளவில் அன்று (11) சனிக்கிழமை அதிகாலை 3 மணியளவில் உணரப்பட்டதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவிக்கிறது.

இதேவேளை, மொனராகலை மாவட்டத்திற்குட்பட்ட வெல்லவாய, புத்தல மற்றும் ஹந்தபஹன்கல ஆகிய பகுதிகளில் அன்று (10) 3.0 ரிச்டர் அளவில் சிறிய நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கத்தினால் பொது மக்களுக்கு எந்தவித உயிர் சேதமோ, பொருட் சேதமோ ஏற்படவில்லை எனவும் பொது மக்கள் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவிக்கிறது.



## அதிகரித்த இலங்கையின் வெளிநாட்டு வருமானம்

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளிநாடுகளில் உள்ள இலங்கை பணியாளர்கள் இந்த நாட்டிற்கு அனுப்பிய பணம் 437.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது 2022 ஜனவரி மாதத்தில் 259.2 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவு செய்யப்பட்டது.

அதன்படி, 2022 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் பணம் அனுப்புதல் 68.8வீத வளர்ச்சியைக் காட்டியுள்ளது.




தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து விலகியவர்கள் கொள்கை ரீதியில் விலகியதாக கூறுகின்றார்கள் உண்மை அதுவல்ல! எனும் நேர்காணலின் தொடர்ச்சி வருகின்ற வாரம் பிரசுரிக்கப்படும்.

---

உள்ளூராட்சி தேர்தலும் கறுப்பு பணமும் எனும் கட்டுரையின் தொடர்ச்சியும் வருகின்ற வாரம் பிரசுரிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

# சினி துளிகள்




## அருள்நிதி பட இயக்குனருடன் இணைந்த அஷ்வின் குமார்

அருள்நிதி நடிப்பில் வெளியான "தேஜாவு" திரைப்படத்தை இயக்கியவர் அரவிந்த் ஸ்ரீனிவாசன். தொடர்ந்து இவர் தெலுங்கில் நவீன் சந்திரா நடிப்பில் உருவான "ரிபீட்" என்ற படத்தினை இயக்கியிருந்தார்.

இப்படங்களின் வெற்றியைத் தொடர்ந்து "குக் வித் கோமாளி" நிகழ்ச்சி மூலம் பிரபலமடைந்து "என்ன சொல்ல போகிறாய்" , "செம்பி" ஆகிய படங்கள் மூலம் திரையுலகில் அறிமுகமான அஷ்வின் குமார் நடிக்கும் புதிய திரைப்படத்தை இயக்குகிறார்.

ரொமாண்ட்டிக் த்ரில்லராக உருவாகும் இப்படத்தினை ஜென் ஸ்டூடியோஸ் (ZHEN Studios) சார்பில் புகழ் தயாரிக்கிறார். இந்நிறுவனத்துடன் ஆர்கா என்டர்டெயின்மெண்ட்ஸ் (ARKA ENTERTAINMENTS) நிறுவனம் இப்படத்தினை இணைந்து தயாரிக்கிறது. இன்னும் பெயரிடப்படாத இப்படத்திற்கான மற்ற நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் தேர்வு நடைபெற்று வருவதாக தயாரிப்பு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தேஜாவு" மற்றும் "செம்பி" இந்த இரண்டு படங்களின் வெற்றியைத் தொடர்ந்து இயக்குனர் அரவிந்த் ஸ்ரீனிவாசன் மற்றும் நடிகர் அஷ்வின் இணைவதால் இப்படத்திற்கான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.



## வசூல் வேட்டையில் "பதான்"

இயக்குனர் சித்தார்த் ஆனந்த் இயக்கத்தில் ஷாருக்கான் கதாநாயகனாக நடித்திருக்கும் படம் "பதான்". இப்படத்தில் ஷாருக்கானுக்கு ஜோடியாக நடிகை தீபிகா படுகோனே நடித்திருக்கிறார். மேலும் பிரபல பாலிவுட் நடிகர் ஜான் ஆபிரகாம் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். இப்படம் கடந்த 25-ஆம் திகதி இந்தியா முழுவதிலும் 8000 திரையரங்குகளில் வெளியானது. பதான் போஸ்டர் பல எதிர்ப்புகளை தாண்டி வெளியான இப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இந்நிலையில், "பதான்" படத்தின் வசூல் அப்டேட்டை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, இப்படம் உலக அளவில் ரூ.865 கோடியை வசூலித்துள்ளது. இதனை படக்குழு போஸ்டர் ஒன்றை வெளியிட்டு அறிவித்துள்ளது. தொடர்ந்து "பதான்" படத்திற்கு கிடைக்கும் வரவேற்பை பார்த்து படக்குழு மகிழ்ச்சியில் உள்ளது.






## வீட்டுக்குள் புகுந்து உங்களை தாக்குவேன்.. நடிகை கங்கனா எச்சரிக்கை

தமிழில் "தாம்தூம்" படத்தில் நாயகியாகவும், "தலைவி" படத்தில் மறைந்த முன்னாள் முதல்-அமைச்சர் ஜெயலலிதா கதாபாத்திரத்திலும் நடித்து பிரபலமான கங்கனா ரணாவத், இந்தியில் அதிக சம்பளம் பெறும் முன்னணி நடிகையாக இருக்கிறார். வலைத்தளத்தில் அடிக்கடி சர்ச்சை கருத்துகள் வெளியிட்டும் வருகிறார்.

மராட்டிய அரசுடன் மோதினார். இதனால் மும்பையில் உள்ள அவரது அலுவலகம் இடிக்கப்பட்டது. சில தினங்களுக்கு முன்பு வீட்டு மாடியிலும், கட்டிடத்திலும், பார்க்கிங்கிலும் "ஜூம் லென்ஸ்" வைத்து தன்னை யாரோ வேவு பார்ப்பதாக புகார் தெரிவித்து இருந்தார். தன்னை வேவு பார்ப்பவர் அவரது மனைவியை பெரிய நடிகையாக்க முயற்சி செய்வதாகவும் தெரிவித்து இருந்தார்.

இந்நிலையில் தற்போது கங்கனா வெளியிட்டுள்ள இன்னொரு பதிவில், "என்னை பற்றி கவலைப்படுகிறவர்கள் ஒரு விஷயத்தை புரிந்து கொள்ளுங்கள். அன்றிரவு முதல் என்னை சுற்றி சந்தேகத்துக்குரிய நடவடிக்கைகள் எதுவும் இல்லை. யாரும் என்னை பின்தொடரவும் இல்லை. சரியாக இருந்து கொள்ளுங்கள். இல்லையேல் வீட்டுக்குள் புகுந்து உங்களை தாக்குவேன். என்னை மனநோயாளி என்று அழைப்பவர்களுக்கு எதிராக நான் எந்த அளவுக்கு செல்வேன் என்று தெரியவில்லை" என்று பதிவிட்டுள்ளார். இது பரபரப்பாகி உள்ளது.



## நயந்தாராவின் அறிவுரை!

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகையான நயன்தாரா தற்போது "இறைவன்" திரைப்படத்தில் ஜெயம் ரவி ஜோடியாகவும் இந்தியில் "ஜவான்" படத்தில் ஷாருக்கானுடனும் நடித்து வருகிறார். இந்நிலையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட நயன்தாரா பெற்றோர்களுக்கு 10 நிமிடத்தை செலவழிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

அவர் பேசியதாவது, "கல்லூரி வாழ்க்கை மிகவும் முக்கியமானது, மகிழ்ச்சி நிறைந்தது. இந்த காலத்தில் நீங்கள் எடுக்கும் முடிவுகள் அனைத்தும் உங்கள் எதிர்காலத்துக்கானது. இந்த நேரத்தில், நீங்கள் நல்ல நண்பர்களோடு பழக வேண்டும். நல்லவர்களை சேர்ந்து இருந்தீர்கள் என்றால் உங்கள் வாழ்க்கை நன்றாக இருக்கும். கெட்டவர்களோடு நீங்கள் சேர்ந்தால், வாழ்க்கை வேறு மாதிரி சென்று விடும். கல்லூரி நாட்களில் எடுக்கும் முடிவுகள் அனைத்தும் உங்கள் எதிர்காலத்திற்கானது. படிப்பை முடித்துவிட்டு வெளியே செல்லும் போது, சிறந்த நபராக திறமையானவராக இருக்க வேண்டும். எவ்வளவு உயரத்திற்கு சென்றாலும், பணிவாக இருக்க வேண்டும். மற்றவர்களிடம் நீங்கள் பணிவாக நடந்து கொள்ளும் போது, உங்கள் வாழ்க்கை இன்னும் அழகாக இருக்கும். உங்கள் பெற்றோருக்கும் நீங்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தினமும் அவர்களுக்காக 10 நிமிடத்தை செலவழிக்க வேண்டும். அதில் அவர்களுக்கு கிடைக்கும் மகிழ்ச்சி உங்களுக்கு ஆசிர்வாதமாக மாறும்" என்று பேசினார்.




## சாதி பெயரை சொல்லி அழைக்க வேண்டாம் - சம்யுக்தா

தமிழ், மலையாளம், தெலுங்கு உள்ளிட்ட தென்னிந்திய மொழி படங்களில் நடித்து பிரபலமானவர் நடிகை சம்யுக்தா மேனன். தற்போது தெலுங்கு இயக்குனர் வெங்கி அட்லூரி இயக்கத்தில், தனுஷ் நடிப்பில் உருவாகி வரும் "வாத்தி" திரைப்படத்தில் நடித்துள்ளார்.

இந்நிலையில் வாத்தி படத்தின் விளம்பர நிகழ்ச்சி சமீபத்தில் நடந்தது. இதில் நடிகை சம்யுக்தா கலந்து கொண்டார். அப்போது நிகழ்ச்சி தொகுப்பாளர், சம்யுக்தாவை அழைத்த போது அவரது சாதி பெயரான மேனன் என்பதையும் சேர்த்து கூறினார். உடனே சம்யுக்தா, அந்த தொகுப்பாளரிடம், தனது பெயரில் இப்போது சாதி பெயர் இல்லை, எனவே நீங்கள் என்னை சம்யுக்தா என்று மட்டுமே அழைத்தால் போதும்.

முன்பெல்லாம் எனது பெயருடன் சாதி பெயரும் இணைந்தே இருந்தது. இப்போது அதனை நானே நீக்கிவிட்டேன். எனவே மற்றவர்கள் என்னை இனி சம்யுக்தா என்றே அழைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி

**07**

கண்காணிப்பு குழுவினர் மக்களை சந்திப்பதையும் அவர்களிடம் இருந்து உண்மைகளை அறிந்து கொள்வதையும் சிறிலங்கா அரசு விரும்பவில்லை மக்களின் கருத்துக்கள் வெளியே வந்தால் விடுதலைப்புலிகள் பொதுமக்களை பணயமாக வைத்திருக்கிறார்கள் என அரசு சர்வதேச ரீதியாக மேற்கொண்டிருந்த பிரச்சாரம் பொய்யாகி போய்விடும் என்பதை அறிந்திருந்தது. எனவே அந்த மக்களை கண்காணிப்பு குழுவினர் சந்தித்து விடாதபடி கண்காணிப்பு குழுவினரின் உயிரையும் பொருட்படுத்தாமல் அவர்கள் செல்லும் இடங்கள் மீது கடுமையான எறிகணை தாக்குதல்களை நடத்தினார்கள். இதன் போது கண்காணிப்பு குழுவை சேர்ந்தவர்கள் மயிரிழையில் உயிர்தப்பினார்கள்.

இதனால் மக்களிடம் இருந்து அவர்களின் மனநிலையை முழுமையாக அறிந்து கொள்ளாமலே அங்கிருந்து கண்காணிப்பு குழுவினர் விரைவாக திரும்பியும் சென்றார்கள். திருகோணமலையில் தமது செயற்பாடுகள் முன்னெடுத்து செல்ல முடியாத நிலை காணப்படுவதாக பின்பு போர்நிறுத்த கண்காணிப்பு குழு அறிக்கையொன்றில் வெளியிட்டது. அத்துடன் திருகோணமலையில் நடக்கும் நிகழ்வுகள் குறித்து பெரிதாக கண்டுகொள்ளாமல் கண்களை மூடியபடி கண்காணிப்புகுழு நடந்து கொண்டது. இவர்களது நடவடிக்கை செயலற்று போனநிலையில் திருகோணமலையில் தமிழ் உணர்வாளர்கள் உரக்க குரல் எழுப்புகின்றார்கள். எதிர்ப்பு போராட்டங்களுக்கும் எந்தவித பயனும் கிடைக்கவில்லை. இதே வேளை அகதிகள் தங்கியிருந்த வெருகல் முருகன் ஆலயம் மீது சிறிலங்கா வான் படையின் கிபீர் விமானங்கள் தாக்குதல் நடத்துகின்றன. அங்கு அடைக்கலம் தேடியிருந்த மக்கள் பலியாகியும் காயங்களுக்கும் உள்ளாகின்றார்கள். மக்களின் நிலைமை மோசமடைகிறது. இதனால் மக்கள் அங்கிருந்து கதிரவெளி வாகரை பிரதேசத்தை நோக்கி மீண்டும் இடம்பெயர்கின்றார்கள். இடம்பெயர்ந்த மக்களுக்கு பணியாற்றுவதில் விடுதலைப்புலிகளின் மருத்துவ பிரிவு திறம்பட செயற்படுகின்றது.

வாகரை பிரதேசத்தில் அரச மருத்துவர்கள் இல்லாத நிலையில் காயமடைந்த போராளிகளுக்கும் சிகிச்சை அளித்த போராளி மருத்துவர்களே மக்களுக்கும் அறுவை சிகிச்சை முதல் அனைத்து அவசர சிகிச்சையினையும் மேற்கொள்கின்றார்கள். மருந்து தட்டுப்பாடு அதிகரித்து இருந்த நிலையில் மட்டக்களப்பில் இருந்த ஐ.சி. ஆர் ஊடாக ஒருதொகுதி மருந்து பொருட்கள் வாழைச்சேனை வழியாக வந்தடைகின்றன. இதனை பயன்படுத்தி மக்களுக்கும் போராளிகளுக்கும் போராளி மருத்துவர்கள் சிகிச்சை செய்கிறார்கள். ஆனாலும் நிலைமை மேலும் மோசமடைகிறது. வாகரை மருத்துவமனை மீது சிறிலங்கா படையினர் எறிகணை தாக்குதலை நடத்துகின்றார்கள் பொதுமக்கள் கொல்லப்படுகின்றார்கள். வாகரை பிரதேசத்துக்கான பாதைகள் ஏ பதினைந்து உட்பட மூடப்படுகின்றன. வாகரை மருத்துவமனையை பாதுகாப்பு வலையமாக்க விடுதலைப்புலிகளால் கோரப்படுகின்றது. இதனையும் மீறி மருத்துவமனை சுற்றியுள்ள பகுதிகள் மீதும் சரமாரியாக ஆட்லேறி பல்குழல் எறிகணை தாக்குதல்கள் நடைபெறுகின்றன. காயமடைந்த மக்களுக்கு சிகிச்சை செய்யமுடியாத நிலையில் மருத்துவமனை சூழல் காணப்படுகிறது. இதில் ஒரு நாளில் எழுபதிற்கும் மேலான மக்கள் கொல்லப்பட்ட சம்பவம் கூட நிறைவேறியது. சிறிலங்கா அரசு எவரது கருத்தினையும் எடுக்காது தாக்குதல்களை தொடர்ந்தது காயப்பட்ட மக்கள் கடல்வழியாக கொண்டு செல்லப்படும் போது இடையில் இடையில் இறக்கின்றார்கள். ஏனைய மக்கள் சிலர் காட்டு வழியாக நடந்து படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த மட்டக்களப்பு பகுதிகளை சென்றடைகின்றார்கள். திருகோணமலையில் விடுதலைப்புலிகளின் நிலை கேள்விக்குறியாகிறது. பலம் பொருந்திய பின்னணியுடன் நடக்கும் தாக்குதலை விடுதலைப்புலிகள் எதிர்கொள்வதில் நெருக்கடியை சந்திக்கின்றார்கள். இலக்கு தவறாமல் நடக்கும் தாக்குதல்கள் பொதுமக்களை கவனத்தில் எடுக்காமல் எடுக்கும்தாக்குதல்கள் பல செய்திகளை சொல்லி சென்றன. மக்கள் அழிந்தாலும் பரவாயில்லை விடுதலைப்புலிகளை திருகோணமலையில் இருந்து அகற்றவேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தது புரிந்தது. தொடர்ந்து திருகோணமலையை தக்க வைப்பது என்பது மேலும் இழப்புக்களையும் அழிவுகளையும் மட்டுமே ஏற்படுத்தும் என்பதை கணக்கில் கொண்டு நிலத்தை இள போராளிகளை காப்பாற்று நிலத்தை இழந்து போராளிகளை காப்பாற்றினால் எதிர்காலத்தில் நிலத்தை மீட்க முடியும் ஆனால் போராளிகளை இழந்தால் எதிர்காலத்தில் நிலத்தையும் இழந்து போராளிகளையும் இழக்க வேண்டி ஏற்படும் என்ற மாவோசேதுங்கின் போரியல் தத்துவ வரிகள் போல் நிலத்தை இழந்து போராளிகளை தக்க வைக்கின்ற முடிவிற்கு விடுதலைப்புலிகள் வருகின்றார்கள். இதனையடுத்து திருகோணமலையில் உள்ள போராளிகள் முழுமையாக வெளியேறும் முடிவு எடுக்கப்பட்டது.

இந்நிலையில் அங்கிருந்த வெடிபொருட்களை விடுதலைப்புலிகள் மறைவிடங்களில் புதைத்தார்கள். போராளிகள் காட்டு வழியாக மட்டக்களப்பிற்கு நகர்த்தப்படுகின்றார்கள். ஒரு தொகுதி போராளிகள் வன்னி செல்லும் காட்டிற்குள் செல்கிறார்கள். முக்கியமானவர்கள் காட்டிற்குள் சென்றுவிட்டார்கள். ஆனாலும் குறிப்பிட்ட போராளிகளும் அங்கு நிலைகொண்டு இருந்தார்கள் கைவசம் இருந்த எறிகணைகளை ஆட்டிலேறி பீரங்கி மூலம் படையினர் மீது கடும் தாக்குதலை நடத்தி முடிவிற்கு கொண்டு வந்தார்கள். இறுதியில் அங்கிருந்த வாகனங்கள் கனரக ஆயுதங்கள் என்பவற்றை கொண்டு செல்ல முடியாத முற்றுகை படையினர் ஏற்படுத்தி விட்டனர். இதனால் எதிரியின் கையில் வெடிபொருட்கள் கனரக ஆயுதங்கள் முழுமையாக போகக்கூடாது என்பதற்காக மோட்டார்கள் வெடிபொருட் களஞ்சியங்கள் தகர்க்கப்படுகின்றன. இதன் போது ஆட்டிலெறி பீரங்கியும் தகர்க்கப்பட்டது. இராணுவத்தின் கையில் எந்த ஆயுதங்களும் செல்ல முடியாத நிலையை ஏற்படுத்தி விட்டு அங்கு நின்றிருந்த ஏனைய போராளிகளும் முற்றுகையை உடைத்துக்கொண்டு காட்டு வழியாக மட்டக்களப்பை வந்தடைந்தார்கள்.



இதேவேளை எஞ்சியிருந்த மக்கள் வாழைச்சேனை ஊடாகவும் காட்டு வழியாகவும் கிரான் உட்பட பல பகுதிகளுக்கும் சென்று தஞ்சமடைந்தார்கள். மக்கள் வெளியேறிய பின் 2007 பெப்ரவரியின் நடுப்பகுதியில் வாகரை மண் சிறிலங்கா படையினரால் ஆக்கிரமிக்கப்படுகின்றது. ஆக்கிரமித்த வாகரையிலுள்ள மலையில் சிங்க கொடியேற்றி மகிழ்ந்தார்கள். இதேவேளை இடம்பெயர்ந்து வந்த மக்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தங்கவைக்கப்படுகின்றார்கள். இந்த நிலையில் ஒட்டுக்குழுவினர் மக்கள் மீது வலை விரிக்கிறார்கள். முகாம்களுக்குள் சென்று விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான குடும்பங்களை இனம் காண்பது இளைய சமுதாயத்தை கைது செய்வது போன்ற நடவடிக்கையில் படையினரின் ஒத்துழைப்பில் ஒட்டுக்குழுவினர் ஈடுபடுகின்றார்கள். பலர் கொல்லப்படுகின்றார்கள். பலர் காணாமல் போகின்றார்கள். அவ்வாறு காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்கள் இன்றுவரை தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**தொடரும்...**

# இலங்கை அரசுடன் தேனிலவு கொண்டாடுகிறதா

# தமிழ் தரப்பு?



அரசியல் ஆய்வாளர்
-நிலாந்தன்-

கடந்த வார தொடர்ச்சி...

கடந்த 13 ஆண்டுகளாக இலங்கையிடம் இந்தியா நிறைய கேட்கின்றது ஒன்றையும் எடுக்க முடியவில்லை. கிழக்கு முனையை கேட்டார்கள் கொடுக்கவில்லை மேற்கை தான் தருவோம் என்று சொன்னார்கள். அதே போன்று பலாலி விமான நிலையமாகட்டும் யாழ்ப்பாணத்தில் இருக்கும் கலாச்சார மையமாகட்டும் மன்னாருக்கும் இந்தியாவிற்குமான கப்பல் போக்குவரத்து சேவையாக இருக்கட்டும் இதுபோன்ற பல விடயங்களிலும் இந்தியா கேட்டு அவர்கள் எல்லா விடயத்திலும் இழுத்தடித்தார்கள். இன்றும்கூட பலாலி விமான நிலையம் விடயத்தில் 20 கிலோகிராம் எடையுள்ள பொருட்களை காவக்கூடிய குட்டி விமானம் தான் விடுபடுகின்றது அதாவது Run way காணாது. ஆனால் Run way க்கு ஒதுக்கப்பட்ட நிலம் தற்பொழுதும் இருக்கின்றது. தங்களது நிலங்களை பிடிக்கத் தேவையில்லை என சொல்லுகின்றார்கள் தகவல்கள் தெரிந்தவர்கள். எனவே அந்த Run way ஐ விடுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. முழு அளவிற்கு ஒரு அனைத்துலக விமான நிலையமாக அதை திறப்பதற்கு அவர்கள் தயாரில்லை ஏனென்று சொன்னால் பலாலி என்பது வடபகுதி இராணுவ கேந்திரத்தின் நிலையம். அதில் இரண்டு சிவில் வாசல்களை அதாவது ஒரு வான் வாசல் ஒரு கடல் வாசல் இரண்டையும் திறப்பது என்பது ஒரு இராணுவ மய நீக்கம் தான். எனவே இந்த விடயத்தில் இந்தியா கேட்டதற்கு ஒத்துவரவில்லை. இந்த பிரச்சனையில் கடந்த 13 ஆண்டுகளாக இந்தியா பல விடயங்களை கேட்டது அவர்கள் கொடுக்கவில்லை. ஆனால் இந்தியாவை மீறி அவர்கள் சீனாவின் கண்காணிப்பு கப்பலை அம்பாந்தோட்டைக்கு வர அனுமதித்தார்கள். இதுபோன்ற விடயங்கள் மூலம் ரணிலுக்கும் இந்தியாவிற்கும் இடையில் ஒரு இடைவெளி இருப்பதாக உணரப்பட்டது. ஆனால் அந்த இடைவெளியை அவர் குறைக்க தொடங்கிவிட்டார் என்பது தெரிகின்றது இறுதியாக வருகின்ற பொழுது அவர் இந்தியாவிற்கு வருமாறு அழைத்திருக்கின்றார் என்று பார்க்கும் பொழுது கடந்த ஓராண்டு காலத்தில் உடனடிக்கு உதவியதற்கு இந்தியா ஆபத்துக்கு உதவியதன் மூலம் இந்தியா இலங்கை தீவில் பல விடயங்களை பெற்றிருக்கின்றது. எனவே இந்தியா கடந்த 13 ஆண்டுகளில் இலங்கையில் அதிகமாக பெற்றுக்கொண்ட ஆண்டாக 2022 ஐ சொல்லலாம். உதாரணமாக எண்ணெய் குதங்கள் விடயத்தில் இழுபறி இருந்தது அதை தீர்த்து விட்டார்கள், மற்றும் பலாலியை திறந்து விட்டார்கள், கடல் பாகத்தை திறக்கப்போவதாக சொல்லப்பட்டுள்ளது. கலாச்சார மண்டபம் திறக்கப்படலாம் என சொல்லப்படுகின்றது. இதைத்தவிர எம்.ஆர். சி என அழைக்கப்படுகின்ற கடல் வழிகளில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களின் போது மீட்பதற்கான ஒரு வலைப்பின்னலமைப்பு இந்தியாவிற்கு கடல் கண்காணிக்க உதவும். அந்த உடன்படிக்கை பல மாதங்களுக்கு முன்னரே இந்தியா கடந்த ஆண்டின் தொடக்கத்தில் இலங்கைக்கு உதவ தொடங்கியதன் விளைவாக அடுத்து சில மாதங்களுக்குள் அந்த உடன்படிக்கை எழுதப்பட்டன. அந்த காலத்தில் கிட்டத்தட்ட ஆறு உடன்படிக்கைகள் எழுதப்பட்டன. அதன்படி சீனாவிடம் முன்னுக்கு கொடுப்பதாக இருந்த தீவுப் பகுதியை மீள புதுப்பிக்கும் திட்டம் அது அப்படியே இந்தியாவிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அது இன்னும் தொடங்கவில்லை. மன்னாரிலும் அந்த திட்டம் எதிர்ப்புக்களுக்கு உள்ளாகியிருக்கின்றது. இந்த பின்னணிக்குள் கடந்த 13 ஆண்டுகளில் இலங்கை தீவில் இந்தியா அதிகம் பெற்றுக்கொண்ட ஆண்டு கடந்த ஆண்டு எனலாம்.

இந்த காலப்பகுதிக்குள் இவ்வாறு நிறைய பெற்றுக்கொண்ட காரணத்தினால் இந்தியாவிற்கும் ரணிலுக்குமான முன்னர் இருந்த இடைவெளி குறைந்து தற்பொழுது ரணிலை இந்தியா வரும்படி கேட்கின்றார்கள் ரணிலும் போகப்போகின்றார். ரணில் இந்தியாவை சுதாகரிக்க தொடங்கிவிட்டார். அப்படி சுதாகரிக்க தொடங்கும் பொழுது அவர் இந்தியாவை திருப்திபடுத்துவதன் மூலம் தமிழ் மக்களையும் இந்தியாவையும் ஒரு நகர்வாக அவர் 13 ஐ தற்பொழுது தூக்கிப்பிடிக்கின்றார். எனவே 13 க்கு ஓம் என்று சொல்லுகின்றார். ஆனால் அவர் 13 க்கு ஓம் என்று சொல்லும் அதே நேரத்தில் இன்னொரு பக்கம் சிங்கள கடும்போக்காளர்கள் சீண்டப்பட்டிருக்கின்றார்கள். அவர் 13 ஐ பற்றி கதைத்ததாலேயே சிங்கள கடும்போக்காளர்கள் சீண்டப்பட்டுவிட்டார்கள். இன்று 13 க்கு எதிராக தென்னிலங்கையில் மகா சங்கங்களும் கடும்போக்கு சிங்கள தேசவாதிகளால் காட்டப்படுகின்ற எதிர்ப்பு என்பது பேச்சு வார்த்தையில் அடுத்த கட்டத்திற்கு போகும் வாய்ப்பு இல்லை என்று வந்துவிட்டது. எனவே இந்த நேரத்தில் ரணில் 13 ஐ பிடிப்பதன் மூலம் இந்தியாவையும் சந்தோசப்படுத்தலாம் இந்தியாவின் தமிழ் மக்களையும் வேறுபடுத்திவிடலாம் என்ற முடிவிற்கு வந்து கட்சி மாநாட்டில் 13 என்று சொல்லத்தொடங்கிவிட்டார். இந்த பின்னணிக்குள் இந்த தமிழ் கட்சிகள் ஏற்கனவே தங்களுக்குள் முட்டுப்பட்டுக்கொண்டிருந்த காரணத்தாலும் தமிழ் கட்சிகளுக்கு இடையில் புதிய சேர்க்கைகள் உருவாக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலும் ஒரு கட்சி மற்றைய கட்சியை விட தான் தீவிரவாதி என்று காட்டும் தேவை வந்திருப்பதால் தமிழ் கட்சிகள் பேச்சு வார்த்தைகள் தொடர்பில் இனி இனக்கப்பாட்டிற்கு போகும் வாய்ப்பில்லை. ஒரு கட்சி மற்றைய கட்சியை விட தான் தீவிரமானவன்ன என்று காட்டுவதற்காக பேச்சு வார்த்தைக்கு அதிகம் நிபந்தனைகளை விதிப்பார்கள்.

சிங்கள பகுதிகளில் தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற எதிர்ப்பலையை இவர்கள் தமிழ் தரப்பில் இருந்து எதிர்ப்பார்கள். எதிர்க்கும் பொழுது மீண்டும் முரண்பாடுகள் கூர்மையடையக்கூடிய வாய்ப்புக்கள் தான் தெரிகின்றன. இப்பொழுதிருக்கும் நிலைமையில் ரணில் பேச்சு வார்த்தை தொடர்பில் போட்ட அந்த நிகழ்ச்சி நிரலில் தமிழ் கட்சிகள் குழப்பிவிட்டன. அவ்வாறு குழப்பியதற்கு பிரதான காரணம் ரணில் சொன்னபடி சொன்ன விடயங்களை சொன்ன காலகட்டத்திற்குள் நிறைவேற்றவில்லை என்பது கூட அதைவிட முக்கியமாகவும் சொல்லலாம். தமிழ் கட்சிகளுக்குள் ஏற்பட்ட உடைவும் புதிய கட்சிகளின் சேர்க்கைகளும் ஓர் காரணம் தான். தமிழரசுக் கட்சி பங்காளி கட்சிகளுடனான தீவிரமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் போனமுறை தேர்தலில் எடுத்த வாக்குகளை திருப்பி எடுக்க வேண்டும். தமிழரசுக் கட்சிக்குள்ளும் ஒரு தலைமைத்துவ போட்டி வந்துவிட்டது மாவை என்ற தலைமைத்துவம் தளம்பத் தொடங்குகின்றது. மாவையின் கட்டுப்பாட்டுக்குள் கட்சி இல்லை என்பது கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலின் போது வேட்புமனு தாக்கல் செய்யும் பொழுது தெரிய வந்துள்ளது. எனவே இந்த பின்னணிக்குள் கட்சி தலைமைக்கு யார் வருவது என்பதில் சுமந்திரன் மற்றும் சிறிதரனுக்கும் இடையில் போட்டி நிலவுகின்றது. இந்த போட்டியில் தீவிரமான நிலைப்பாட்டை எடுப்பவர் தலைமைத்துவத்திற்கு வரலாம் என்று ஒரு நம்பிக்கை இருக்கின்றது. இந்தியா தொடர்பில் இந்தியாவை நெருங்கிச் செல்வதன் மூலமும் தங்களது தலைமைத்துவத்தை பாதுகாத்துக்கொள்ளலாம் என்று இருவரும் நம்புவதாக தெரிகின்றது. அதனால் இரண்டு பேருமே தமிழ் நாட்டுக்கு போகின்றார்கள் இந்தியாவை அரவணைக்க முற்படுகின்றார்கள். இன்னொரு பக்கம் பேச்சு வார்த்தையில் தீவிரமான நிலைப்பாட்டை எடுக்கின்றார்கள். எனவே இன்று கூட்டமைப்பு உடைந்து போனதன் விளைவாக புதிய சேர்க்கைகள் உருவாகியுள்ளதன் விளைவாக பேச்சு வார்த்தைகளை எதிர்கொள்வதில் தமிழ் தரப்பு தீவிரமான இறுக்கமான நிலைப்பாடுகளை எடுக்கக்கூடிய வாய்ப்புக்கள் தெரிகின்றன. இன்னொரு பக்கம் 13 க்கு எதிராக அவர் 13 ஐ தரப்போவதேயில்லை அது வேற விடயம். 13 ஐ தரலாமா என்று அவர் சொல்லத் தொடங்கும் பொழுதே எதிர்ப்பு வந்து விட்டது அதுவும் மகா சங்கங்களிடமிருந்து வருகின்றது. இதில் ஒன்றை கவனிக்க வேண்டும் 13 ஒன்றும் புதிதாக வரப்போவதில்லை யாப்பில் இருப்பதை அமுல்படுத்துவதற்கே 33 வருடங்களுக்கு பின்னர் எதிர்ப்பு. எனவே இலங்கை தீவின் யாப்பு எப்படிப்பட்டதொரு யாப்பு? இந்த யாப்பை எப்படி தமிழ் மக்கள் நம்புவது? இன்று 33 வருடங்களுக்கு மேலாக யாப்பில் இருக்கும் ஒன்றை நிறைவேற்றுவதற்கே இவ்வளவு எதிர்ப்பாக இருக்கின்றது எனவே யாப்பை நடைமுறைப்படுத்தாதே என்று தானே பௌத்த சங்கங்கள் சொல்லுகின்றது. யாப்பை நடைமுறைப்படுத்தாதே என்று ஒரு மத நிறுவனங்கள் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பது என்பது எந்தவகையான அரசியல் உலகில் அதிகம் மதிக்கப்படுகின்ற ஒரு சட்ட ஏற்பாடு யாப்பு. அந்த யாப்பை நிறைவேற்றாதே யாப்பில் இருப்பதை நிறைவேற்றாதே என்று வெளிப்படையாக எதிர்ப்பு காட்டும் அளவிற்கு ஒரு சக்திமிக்க மத நிறுவனம் காணப்படுகின்றது என்பது இலங்கைத் தீவின் பௌத்த மதம் என்பது அரச மதம் அரசு தீர்மானிக்கும் மதம்.

எனவே அவர்கள் எப்படி சொல்லுகின்றார்கள் என்றால் இலங்கைத் தீவின் யாப்பு எத்தகையது அந்த யாப்புக்கு என்ன புனிதம் இருக்கின்றது. யாப்புக்கு புனிதம் இல்லையென்றால் ஒன்றுக்கும் புனிதம் இல்லை. இதை இலங்கை தீவின் யாப்பு புனிதம் இழந்து விட்டது. அந்த யாப்பு தமிழ் மக்களுக்கு பாதுகாப்பை தராது என்பதை நிரூபிக்கும் மற்றுமொரு சம்பவம் அண்மையில் நடந்து கொண்டிருக்கின்றது. என்னவென்றால் இந்த பிக்குகள், மகா சங்கங்கள் யாப்பை எதிர்க்கும் விதம். அவர்கள் 13 க்கே இவ்வளவு எதிர்ப்பை காட்டும் பொழுது தமிழ் கட்சிகள் 13 காணாது என்று சொல்லுகின்றது. 13 ஐ ஒரு இடைக்கால ஏற்பாடாகத்தான் சில தமிழ் கட்சிகள் ஏற்றுக்கொள்ளுகின்றது ஆக்கிரமிப்பை தடுப்பதற்கு. அப்பொழுதும் ஆக்கிரமிப்பை தடுப்பதற்கு பொலிஸ் அதிகாரம் வேண்டும். அதிகாரம் என்பது பொலிஸ் அதிகாரம் தானே நில அதிகாரம் தானே. காணி அதிகாரமும் பொலிஸ் அதிகாரமும் இல்லையென்றால் பிறகென்ன அதிகாரம். ஒரு மாகாணத்திற்கு இருக்கின்ற அதிகாரம் என்பது பிரதானமாக காணி அதிகாரம் மற்றும் பொலிஸ் அதிகாரம் நீங்கள் நினைத்ததை செய்வதற்கு உங்களுக்கு ஒரு காணி வேண்டும். பொலிஸ் ஒன்று வேண்டும். உங்களுக்கு உங்களது நிலத்தின் மீதும் அதிகாரம் இல்லை அதிகாரத்தை செயற்படுத்தும் உபகரணமும் உங்களுக்கு இல்லை. அந்த இரண்டு அதிகாரத்தையும் கொடுப்பதற்கே இவ்வளவு எதிர்ப்பு என்னும் பொழுது தமிழ் கட்சிகள் இனி மேலும் இறுக்கமான நிலைப்பாட்டை எடுக்கும் நிலைமை வந்து விட்டது. தென்னிலங்கையிலும் அவ்வாறானதொரு அரசியல் தான் கூறுமுகம் கொள்ளுகின்றது.

எனவே இந்த பேச்சு வார்த்தை அடுத்த கட்டத்தை நகர்வது மேலும் நெருக்கடிக்குள் உள்ளாகும் என்பது மட்டுமல்ல ரணில் விக்ரமசிங்க எதிர்பார்த்தபடி இந்த சுதந்திர தினத்தை முன்னிட்டு பேச்சு வார்த்தைகள் தொடர்பில் ஒரு திருப்திகரமான அறிவிப்பை வெளியிட முடியாது. இந்த சுதந்திர தினம் என்பது ரணிலின் நிகழ்ச்சி நிரலுக்கு கொண்டு வந்தது போல் எதிர்பார்ப்பது போல் இனப்பிரச்சனை தொடர்பில் ஒரு முக்கிய திருப்பகரமான அறிவிப்பை வெளியிட முடியாத ஒரு சுதந்திர தினமாகவே இதற்கு முன்னர் கொண்டாடப்பட்ட சுதந்திர தினங்கள் போலவே வழமையான மற்றுமொரு சுதந்திர தினமாக இது முடிகின்றது என்பது தான் உண்மை.



# மகளிர் பக்கம்

## குளிர்கால நோயை தடுக்கும் நெல்லிக்காய்

குளிர் காலத்தில் வரும் ஒரு சில நோய்களை தடுக்க உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் தேவை என்றும் அந்த நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் இருப்பதால் அதை சாப்பிட வேண்டும் என நமது முன்னோர்கள் கூறி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

குளிர்காலத்தில் எளிதாக பல்வேறு நோய்கள் வரும் என்பதும் அந்த நேரத்தில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க நெல்லிக்காய் சாப்பிட வேண்டும் என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்

நெல்லிக்காய் நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் இருப்பதால் அது குளிர்காய குளிர்கால நோயை தடுத்து உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை பலப்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

நெல்லிக்காயில் பைட்டோ நியூட்ரியன்கள் மற்றும் ஆன்டி ஆக்ஸிடண்ட்கள் அதிகம் உள்ளது. இதனால் மூளை செல்கள் தாக்கப்பட்டால் அது எதிர்த்து போராடும் தன்மை கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது

மேலும் நெல்லிக்காய் விட்டமின் சி சத்து அதிகம் கொண்டுள்ளதால் நினைவு திறனை அதிகரிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. நெல்லிக்காய் மிட்டாய் நெல்லிக்காய் ஜுஸ் நெல்லிக்காய் ஊறுகாய் என நெல்லிக்காயை பல்வேறு வகைகளில் சாப்பிடலாம்



## பாலில் முந்திரியை ஊறவைத்து குடிப்பதனால் கிடைக்கும் நன்மை

பொதுவாக ஊறவைத்த முந்திரியை உட்கொள்வதால் பல நன்மைகள் உள்ளன என்று பலரும் கருதுகின்றனர். ஏனெனில் இவற்றில் சத்திவாய்ந்த ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளது.

குறிப்பாக பாலில் ஊறவைத்த முந்திரியை உட்கொள்வது எலும்புகள் மற்றும் தசைகளின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் அதே நேரத்தில் இது மலச்சிக்கலில் இருந்து விடுபட உதவுகிறது.

மேலும் பல நன்மைகளை இவை நமக்கு தருகின்றது. தற்போது அவை என்னென்ன என்று இப்போது தெரிந்துகொள்ளுங்கள்.

**எப்படி சாப்பிடுவது?**

முதலில், ஒரு கிளாஸ் பாலில் 3-5 முந்திரியை ஊறவைத்து, இரவு முழுவதும் அப்படியே விடவும். இப்போது காலையில் முந்திரியை பாலில் சரியாக வேகவைக்கவும். முடிந்ததும், முந்திரியை மென்றுவிட்டு பால் குடிக்கவும்.

பாலில் கொதிக்க வைப்பதால் முந்திரி மிகவும் சூடாக இருக்கும். இந்த முந்திரியை அதிகமாக சாப்பிட வேண்டாம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**நன்மைகள்**

முந்திரி பருப்பை இரவில் பாலில் ஊற வைத்து, காலையில் சாப்பிட்டு வந்தால், இதன் மூலம் உங்கள் வயிற்றை எளிதில் சுத்தம் செய்யலாம். இது உங்களை மலச்சிக்கலிலிருந்து முற்றிலும் விடுபட உதவுகிறது.

பாலில் ஊறவைத்த முந்திரி பருப்பை சாப்பிடுவதால், நோயெதிர்ப்பு சக்தி அதிகரித்து விரைவில் எந்த நோயும் வராமல், எப்போதும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

நீங்கள் தினமும் பாலில் ஊறவைத்த முந்திரி பருப்பை சாப்பிட்டு வந்தால், உங்கள் உடல் ஃப்ரீ ரேடிக்கல்களை அழித்து விடும். இதனுடன், ஃப்ரீ ரேடிக்கல்களால் ஏற்படும் பாதிப்பிலிருந்தும் உங்கள் உடல் காப்பாற்றப்படும். உங்கள் உடலையும் சருமத்தையும் பாதுகாப்பாக வைத்திருக்க, நீங்கள் முந்திரியை உட்கொள்ள வேண்டும்.

**முக்கிய குறிப்பு**

பால் மற்றும் முந்திரி இரண்டிலும் கலோரிகள் மற்றும் ஆரோக்கியமான கொழுப்புகள் நிறைந்திருப்பதால் இது உங்கள் எடையை அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே, முந்திரியை குறைந்த அளவு மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.



## இறால் வறுவல்

தேவையான பொருட்கள்:

இறால் - 500 கிராம்
வெங்காயம் - 2 பெரிய
பூண்டு - 6 பல்
இஞ்சி - 2 துண்டு
காய்ந்த மிளகாய் - 6
தனியா - 4 மேசைக்கரண்டி
சீரகம் - 2 மேசைக்கரண்டி
மிளகு - 2 மேசைக்கரண்டி
துண்டு - 2 பட்டை
கிராம்பு - 4
ஏலக்காய் - 2
எண்ணெய், உப்பு, கறிவேப்பிலை - தேவையான அளவு

செய்முறை:

முதலில் இறாலை நன்கு சுத்தம் செய்து கழுவி ஒரு பாத்திரத்தில் வைத்து கொள்ளவும். அடுத்ததாக இன்னுமொரு பாத்திரத்தை மிதமான சூட்டில் அடுப்பில் வைத்து அதில் தனியா, சீரகம், மற்றும் மிளகை போட்டு அதை நன்கு வாசம் வரும் வரை வறுக்கவும்.

பின் வறுக்க பொருட்களை ஆற விட்டு அதை ஒரு மிக்ஸி ஜாரில் போட்டு நன்கு அரைத்து எடுத்து ஒரு கிண்ணத்தில் வைத்து கொள்ளவும். பின்பு ஒரு பாத்திரத்தை மிதமான சூட்டில் அடுப்பில் வைத்து அதில் சுமார் 2 மேசைக்கரண்டி அளவு எண்ணெய் ஊற்றி அது சூடானதும் அதில் பட்டை, ஏலக்காய், கராம்பு, மற்றும் காய்ந்த மிளகாயை சேர்த்து அதை சுமார் ஒரு நிமிடம் வரை வதக்கவும்.

ஒரு நிமிடத்திற்கு பிறகு அதில் சிறிதாக நறுக்கிய வெங்காயத்தை போட்டு அதை நன்கு கலந்து விட்டு வெங்காயம் கண்ணாடி பதம் வரும் வரை அதை வதக்கவும். வெங்காயம் கண்ணாடி பதம் வந்ததும் அதில் இஞ்சி பூண்டு பேஸ்ட்டை போட்டு, இஞ்சி பூண்டு பேஸ்ட்டின் பச்சை வாசம் போகும் வரை அதை வதக்கவும். பின்னர் இறாலை போட்டு அது நன்கு வெங்காயத்துடன் சேருமாறு அதை கலந்து விட்டு சுமார் ஒரு நிமிடம் வரை வேக விடவும்.

ஒரு நிமிடத்திற்கு பிறகு அதில் நாம் அரைத்து வைத்திருக்கும் மசாலா மற்றும் தேவையான அளவு உப்பு போட்டு அதை நன்கு கலந்து விட்டு சுமார் 4 லிருந்து 5 நிமிடம் வரை வேக விடவும்.

5 நிமிடத்திற்கு பிறகு கறிவேப்பிலையை தூவி, கலந்து விட்டு சுமார் ஒரு நிமிடம் வரை வேக விடவும். ஒரு நிமிடத்திற்கு பிறகு இறால் வறுவல் தயார்.



## பெண்களுக்கு வாதத்தால் வரும் மார்பக வலி

பெண்கள் அதிகம் பாதிக்கப்படுவது மார்பக வலியினால் தான். கிட்டத்தட்ட 65% பெண்கள் மார்பக வலியால் அவதிப்படுவதாக அறிவியல் தரவுகள் கூறுகின்றன. மாதவிடாய்க்கு முன்பாக இத்தகைய வலியுடனும் வேதனையுடனும் பல பெண்கள் துன்பப்படுகிறார்கள்.

முதல் பூப்பினை எய்தும் போதும், கர்ப்ப காலத்திலும், கர்ப்பத்திற்கு பின் பாலூட்டும் காலத்திலும் கூட பல பெண்களுக்கு மார்பக வலி பல்வேறு உடல் செயலியல் மாற்றங்களால் உண்டாகிறது.

இறுதி மாதவிடாய் என்று கருதப்படும் மெனோபாஸ் நிலைக்கு பின்னும் பல பெண்களுக்கு மார்பக வலி உண்டாகும். இது "சைக்ளிக் அல்லாத மார்பக வலி" என்று கருதப்படும். இவற்றிற்கு சித்த மருத்துவம் தரும் தீர்வுகளையும், உணவு முறைகளையும் பின்பற்றுவது, வலியை குறைத்து நல்ல முன்னேற்றம் தரும்.

மார்பக வலிக்கு காரணம் உடலில் அதிகமாகும் வாதம் தான் என்கிறது சித்த மருத்துவம். எனவே வாதத்தை குறைக்க எளிமையான ஆமணக்கு எண்ணெயை பயன்படுத்தலாம். அதனை மார்பகத்தின் மேலேயும் பூசி வரலாம். அவ்வப்போது ஆமணக்கு எண்ணெயை தேக்கரண்டி அளவு உள்ளுக்கும் குடிக்க வாதம் குறைந்து வலி குறையும். சிறிது சமைக்கவும் பயன்படுத்தி, குடும்பத்தில் உள்ள அனைவரின் வாதத்தையும் குறைத்து உடலை கெடாமல் பாதுகாத்து கொள்ளலாம்.

வாதத்தை தூண்டும் பதப்படுத்தப்பட்ட, எண்ணெய் தோய்ந்த உணவுகளை தவிர்த்து, லேசான, எளிதில் சீரணிக்கும் படியான உணவுகள் எடுத்துக்கொள்வது அவசியம். உணவில் அதிக நார்ச்சத்துக்களை கொண்ட பழங்கள் மற்றும் காய்கறிகள் பயன்படுத்துவதும் அவசியம். மலச்சிக்கல் கூடினால் வாதம் கூடுவதாகப் பொருள். இதனால் மார்பகவலி அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதால் மலச்சிக்கலை உண்டாக்கும் உணவுகளை தவிர்ப்பது நல்லது.

கோப்பி மற்றும் தேநீரில் உள்ள மெத்தில்சேந்தின் எனும் வேதிபொருள் மாதவிடாயின் போது மார்பகவலியை அதிகரிப்பதாக உள்ளது. இன்றைய வாழ்வியலில் கோபி, டீ-க்கு அடிமையாகிவிட்ட பல பெண்கள் இதை அவசியம் தெரிந்துகொண்டு இயற்கை பானங்களை நாடுவது நன்மை பயக்கும்.



காதல் தூது கொடுக்க வந்த புறாவும்
உன்மேல் காதல் கொண்டு விட்டதா
என்னவளே...
நீண்ட நாட்களாக என்னிடம் வந்து
சேரவில்லையே - உன்னிடம்
வசப்பட்டு விட்டதோ ...
திருப்பி அனுப்பிவிடு உன்னுடைய
காதலை கொண்டு என்னிடம்...



# தமிழ் தேசிய கூட்டமைப்பை சிதைக்கவந்த சகுனி எம்.ஏ.சுமந்திரன்

## பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் ஜனா எம்.பியுடனான (ரெலோ) சிறப்பு நேர்காணல்



**கடந்தவார தொடர்ச்சி...**

**கேள்வி : உங்களது கட்சி சின்னத்தை பாவிக்க முடியாமல் போனதன் காரணம் அவர் மிக முக்கியமான சூத்திரதாரி என்பதனால் தானா?**

பதில் : எங்களுக்கு தேவை அவர் இல்லை. அவரை நாங்கள் மாற்றுகின்றோம். தேர்தல் இருக்கும் பொழுது தற்பொழுது உடனடியாக மாற்றமுடியாது. எங்களுடன் கூட்டமைப்பிற்கு விக்னேஸ்வரன் அவர்கள் பேசுவதற்கு வந்திருந்தார். அவர் தன்னை செயலாளராக நியமிக்குமாறும்கூறியிருந்தார்நாங்கள் அதற்கு ஒத்துக்கொண்டோம். RR ராகவன் அவர்கள் உடனடியாக சொல்லியிருந்தார் தற்பொழுது என்னுடைய இராஜினாமா கடிதத்தை நான் எழுதித்தருகின்றேன். விக்னேஸ்வரன் ஐயாவை செயலாளராக போடுவதற்கு எங்களுக்கு எந்தவிதமான ஆர்ச்சேபனையும் இல்லை என்பதனை தலைவர்கள் அனைவரும் எழுதித்தருகின்றோம் என ராகவன் அவர்கள் கடிதம் எழுதிவிட்டார் அதிலிருந்து தான் விலகுவதாக. ஆனால் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்பு அலுவலக ரீதியாக அதை செய்ய முடியாது. கடிதத்தை வைத்துக்கொண்டு விக்னேஸ்வரன் அவர்கள் தேர்தல் முடிந்த கையுடன் அதை மாற்றியிருக்கலாம். அதைத்தான் நாங்கள் இப்பொழுதும் செய்யப்போகின்றோம் ராகவன் அவர்கள் ஏற்கனவே கடிதம் எழுதி தந்துவிட்டார் தான் அதிலிருந்து விலகுவதாக ஆனால் ஒரு அரசியல் கட்சியாக நாங்கள் இந்த தேர்தலை சந்திக்கும் பொழுது தற்பொழுது இருக்கும் செயலாளர் அவர்கள் தான் தேர்தல் சம்பந்தமான ஆவணங்களில் சட்டப்படி கையொப்பமிடப்பட வேண்டிய ஒருவராக இருக்கின்றார். தேர்தல் முடிந்த கையுடன் இந்த கட்சிகள் கூடும் அதற்கு முன்பும் சிலவேளைகளில் நேரம் இருக்குமானால் கட்சிகள் கூடி புதிய நிர்வாக குழுவை தெரிவு செய்யும் தேர்தல் முடிந்தவுடன் தேர்தல் ஆணையகத்திற்கு அதை சமர்ப்பித்து அதற்கான புதிய நிர்வாகிகள் தெரிவாவார்கள் அதில் எந்தவித மாற்றுக்கருத்தும் இல்லை.

**கேள்வி : இனி அழலில் இருக்கக்கூடியது இந்த ஜனநாயக போராளிகள் ரெலோ புளொட் ஈ.பி.ஆர்.எல்.எப் சிறிகாந்தா போன்றோரின் கட்சி இவ்வளவும் தான் பகவியில் இருக்கும் கூட்டமைப்பு இல்லை என்று கூறுகின்றீர்களா?**

பதில் : அப்படியில்லை. ஏனையவர்கள் வந்து இணங்கலாம் ஈரோஸ் அதாவது ஈரோசில் இரண்டு பிரிவு இருக்கின்றார்கள் முன்னர் இருந்த பதிவு ஒன்று தற்பொழுது இராஜேந்திரா தலைமையிலே உள்ள ஈரோஸ் நேற்று கூட என்னுடன் பேசியிருந்தார்கள் திருகோணமலையில் இருந்து சில உடன்பாடு விடயங்களாக. நான் தலைவரின் அனுமதியை பெற்று கூறுகின்றேன் அவர்கள் எங்களுடன் இணைந்து செயலாற்ற விரும்புகின்றார்கள். ஏன் விக்னேஸ்வரன் கூட நாங்கள் அவரை செலாளராக நியமித்தால் தேர்தலுக்கு பின்பு இணைந்து செயற்படலாம். தமிழரசுக் கட்சி கூட அவர்கள் எங்களுடன் இணைந்து செயலாற்ற விரும்பினால் வரலாம். ஆனால் இந்த தேர்தல் அவர்களை வரவைக்க வேண்டும் என்பது எங்களது குறிக்கோள். ஏனென்றால் மக்கள் தனி கட்சிக்கா அல்லது தமிழ் தேசியத்திற்கா என்பதை முடிவெடுக்க வேண்டிய ஒரு சந்தியிலே நிற்கின்றார்கள் தற்பொழுது. நான் நினைக்கின்றேன் அந்த மக்கள் முடிவெடுத்திருக்கின்றார்கள் தமிழரசுக் கட்சி ஒரு பாரம்பரியமான கட்சி ஒரு நீண்ட கட்சி எங்களது பரம்பரையினர் எல்லாம் எங்களது தாய் தகப்பன் எல்லாம் தமிழரசுக் கட்சியில் தான் இருந்தவர்கள். ஆனால் தமிழரசுக் கட்சிக்கு இந்த முறை தேர்தலிலே ஒரு பாடத்தை புகட்டி மீண்டும் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட வேண்டும் உங்களது தலைக்கணத்தை மாற்றி நீங்கள் வீட்டு சின்னத்துடன் சென்றால் தும்புக்கட்டை வீட்டு சின்னத்தில் வைத்து தேர்தலில் போட்டியிட்டாலும் வெல்லுவோம் என்ற காலம் எல்லாம் மலையேறி போய்விட்டது. மக்கள் தற்பொழுது அரசியலிலே பாண்டித்துவம் பெற்றிருக்கின்றார்கள். அரசியலிலே மிகவும் அவதானமாக உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருக்கின்றார்கள். தமிழ் மக்களுக்கு எல்லாம் தற்பொழுது தேவை எங்களது ஒற்றுமை. இன்று நாங்கள் பிரிந்து உள்ளூராட்சிமன்றத் தேர்தலிலே கேட்டோமாக இருந்தால் அந்தந்த வட்டாரங்களிலே வெல்லும் வாய்ப்புக்கள் யாரோ ஒருவருக்கு கிடைக்கும். ஆனால் எதிர்காலத்தைப் பாருங்கள் மாகாணசபைத் தேர்தலைப் பாருங்கள் பாராளுமன்றத் தேர்தலைப் பாருங்கள் இன்று த.தே.கூட்டமைப்பு தொங்கி தேராகியிருக்கின்றது. 2004 இல் 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்த த.தே.கூட்டமைப்பு இன்று 10 பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். இதற்கெல்லாம் காரணம் யார் என்பது நமக்குத் தெரியும்.

தற்பொழுது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 2 வைத்திருக்கின்றார், விக்னேஸ்வரன் 1 வைத்திருக்கின்றார், த.தே.கூட்டமைப்பு 10 வைத்திருக்கின்றது யாழ்ப்பாணத்திலே அங்கஜன் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெறுகின்றார், மட்டக்களப்பிலே பிள்ளையான் அவர்கள் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெறுகின்றார் இந்த நிலை தொடருமாக இருந்தால் தமிழ் தேசியம் அழிந்துவிடும். இதை யார் விரும்புகின்றார்கள் சிங்கள பெரும்பான்மையினர் விரும்புகின்றார்கள் பெரும்பான்மை கட்சிகள் விரும்புகின்றார்கள். அதே விடயத்தை தான் இன்று சுமந்திரன் விரும்புகின்றார் அவர்கள் விரும்புவதை இவர் நடைமுறையில் காட்டுகின்றார். இது மக்களுக்கு தேவையில்லை நாங்கள் ஒன்றாக இருக்க வேண்டும்.

**கேள்வி : ஆயுதம் தூக்கிய கட்சிகள் அனைத்தும் துரோகிகள் காட்டிக்கொடுக்கவர்கள் அல்லது கற்பழிக்கவர்கள் கொள்ளையடிக்கவர்கள் என்றவொரு குற்றச்சாட்டைத் தானே தமிழரசுக் கட்சி முன்வைக்கின்றது?**

பதில் : துரோகிகள் என்று யார் கூறியது தமிழீழ விடுதலைப்புலிகள், அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளினது ஆதரவாளர்கள். அதைப்பற்றி விரிவாக நான் பின்னுக்குப் போகவிரும்பவில்லை. யார் துரோகிகள் யார் தியாகிகள் என்ற நிலைக்கு போகவிரும்பவில்லை. ஏனென்றால் ஆரம்ப காலகட்டங்களிலே 1982, 1983 களில் எந்த இயக்கத்திற்கு போக வேண்டும் என்று குறிப்பிட்டு யாருமே சென்றது இல்லை. நான்கூட 40 வருடங்களுக்கு முன்பு தமிழீழ விடுதலை இயக்கத்திற்கு செல்லும் பொழுது அதுதான் எனக்கு கிடைத்த கட்சியாக இருந்தது எனவே சென்றேன் அந்த நேரத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் எனக்கு தொடர்புகள் இருந்திருந்தால் நான் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தான் சென்றிருப்பேன். அந்த நேரத்தில் கடலில் ஒருவன் தத்திளித்துக்கொண்டிருந்தால் அம்பிடும் கம்பை பிடித்து கரையேறுவதற்கு தான் பார்ப்பான் தமிழ் மக்களுக்காக. அந்த நேரத்தில் 5 பிரதான இயக்கங்கள் இருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ், புளொட், கூடுதலான இளைஞர்கள் எந்த இயக்கத்திற்கு சென்றார்கள் என்றால் புளொட்டுக்குத் தான் சென்றார்கள். ஆனால் இடையிலே ஏற்பட்ட சில சில மோதல்கள் என சில சில பிரச்சனைகள் இருந்தது. இலங்கை இராணுவத்துடன் ரெலோ இருந்தது, ஈ.பி. ஆர்.எல்.எப் இருந்தது புளொட் இருந்தது என்பதை விட இவர்கள் எல்லாருக்கும் முதல் இலங்கை இராணுவத்துடன் இணைந்து இருந்தவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் இந்திய இராணுவ காலகட்டத்திலே. அதற்கு முன்பு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் தமிழீழ விடுதலை இயக்கத்திற்கும் இடையிலே 1986 இல் மோதல் ஏற்படும் பொழுது யாழ்ப்பாணத்தில் நான் அந்த நேரத்தில் இருந்தேன். யாழில் ஹெலிகொப்டரில் இருந்து நோட்டீஸ் போட்டார்கள் இலங்கை இராணுவம் ரெலோவை சேர்ந்தவர்கள் எங்களது முகாமிற்கு வரலாம் உங்களுக்கு முழு பாதுகாப்பு தருகின்றோம் என்று. ஒருவர் கூட இலங்கை இராணுவத்திடம் சரணடையவில்லை, அவர்களது முகாமிற்கு செல்லவில்லை அது வேறு விடயம். இன்று தமிழரசுக் கட்சியினர் ஏனையவர்களை துரோகி என்கின்றார்கள் தமிழரசுக் கட்சியை தமிழீழ விடுதலைப்புலிகள் துரோகி என்று சொல்லவில்லையா? 2009 க்கு முன்பும் துரோகிகள் என்றார்கள் இன்றும் துரோகிகள் என்கின்றார்கள். இன்று சுடப்பட்டு கொல்லப்படுபவர்கள் எல்லாம் துரோகிகள் பட்டியலில் தானே சேர்க்கப்பட வேண்டும். தமிழரசுக் கட்சியில் இருந்து தமிழ் விடுதலை கூட்டணியில் இருந்து எத்தனை தலைவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளால் சுடப்பட்டார்கள். தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சுடப்பட்டார். ஆனால் தமிழரசுக் கட்சியை எடுத்துக்கொள்ளுங்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் அவரது மனைவி சரோஜினி மேஜர், சிவபாலன் மேஜர், திருகோணமலையில் தங்கதுரை அண்ணன், மட்டக்களப்பில் சம்மந்தன் மூர்த்தி அண்ணன், கொழும்பில் நீலன் திருச்செல்வம் இவர்கள் எல்லாரும் தியாகிகளா? கதைப்பதற்கு இவர்களுக்கு என்ன அறுகதை இருக்கின்றது. இயக்கம் போராட சென்றவர்கள் தங்களது ஆவி உடல் உயிர் அத்தனையும் மக்களுக்காக அர்ப்பணித்து போராட சென்றவர்கள் அவர்களுக்குள்ளே முரண்பாடுகள் வந்தது என்பது உண்மை. இந்த முரண்பாடுகளை எல்லாம் ஈர்த்துதான் 2001இல் தங்களுக்குள்ள கடந்த கால கசப்பான நிகழ்வுகள் எல்லாம் மறந்து நாங்கள் ஒன்றாக இணைந்து செயற்படுவோம் என்ற அடிப்படையில் தான் த.தே.கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இன்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

2010க்குபின்பும்சுமந்திரன்அவர்களைதமிழீழ விடுதலைப்புலிகள் கொல்ல வந்தார்கள் என்று இன்றும் பயங்கரவாத தடைச்சட்டத்திற்குள்ளே ஆக்கள் இருக்கின்றார்கள். இதுக்கு பின்பும் துரோகிகளாக இருப்பது யார் இவர்கள் தானே நாங்கள் இல்லை. நாங்கள் இன்று போராட சென்ற நாங்கள் எங்களுக்குள் முரண்பாடு வந்தது ஒன்றாக இருக்கின்றோம். 2001 இல் கூட்டமைப்பு உருவாகும் பொழுதும் ஒன்றாக இருக்கின்றது இன்றும் ஜனநாயக போராளிகள் கட்சி தமிழீழ விடுதலைப்புலிகள் கட்சியிலே இருந்து போராடியவர்கள். அவர்கள் நாங்கள் எல்லாம் ஒன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒன்றாக இருக்கின்றோம். உண்மையிலே மாபெரும்துரோகத்தை செய்தவர்கள் தமிழரசுக் கட்சி தான் இன்று. 2004 இல் கருணா அம்மான் அவர்கள் மாபெரும் துரோகத்தை செய்திருந்தார் தமிழீழ விடுதலைப் புலிகளை பிரிந்து கிழக்கு மாகாணம் என்று சொல்லி துரோகத்தை செய்தார். அந்த நேரத்திலே தமிழீழ விடுதலைப் புலிகள் முப்படைகளையும் வைத்து மிகவும் பலமாக இருந்தார்கள். த.தே.கூட்டமைப்பு அரசியல் ரீதியாக 22 பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்து பலமாக இருந்தார்கள். அந்த தருணம் தான் கருணா தமிழ் தேசியத்தை சிதைக்க தொடங்கிவிட்டார். இன்று தமிழர்கள் மிகவும் பலவீனமாக இருக்கின்றார்கள். முஸ்லிம் காங்கிரசை எடுத்துக்கொள்ளுங்கள் ஹிஸ்புல்லா இன்று திரும்பி போய் முஸ்லிம் காங்கிரசில் சேர்ந்து விட்டார் அவர்களது கட்சியை பலப்படுத்துவதற்காக. அவனுடைய சமுதாயத்திற்காக அவன் என்ன பாதிக்கப்பட்டான் சஹ்ரானின் குண்டு வெடிப்பால் கொஞ்சம் பாதிக்கப்பட்டான். எங்களது மக்கள் இலட்சக்கணக்கான உயிர்களை பலிகொடுத்திருக்கின்றார்கள். கோடி கணக்கான சொத்துக்களை பறிகொடுத்திருக்கின்றார்கள். கலை கலாச்சாரம் அனைத்தையும் இழந்து இன்று எங்களது நிலம்பறிபோய்க்கொண்டிருக்கின்றது. நாங்கள் ஒன்றாக பொங்கி எழ வேண்டிய நேரத்தில் த.தே.கூட்டமைப்பு அந்த கூட்டமைப்பை உடைத்துக்கொண்டு நீங்கள் தனியாக செல்வது என்பது எந்தளவு துரோகமான செயல் என்று சிந்தித்துப் பாருங்கள்.

**கேள்வி : அவர்கள் கொல்லப்பட்ட விடயம் தனித்தனியாக கேட்டுவிட்டு ஒன்றாக இணைவோம் என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் மின்னல் நிகழ்ச்சியில் சொல்லியிருந்தாரே?**

பதில் : இல்லை இல்லை அப்படி ஒன்றும் ஏற்றுக்கொள்ளவில்லை. அது என்னவென்றால் இவர் ஆரம்பத்தில் தனியே தனியே செல்வமோடு கதைத்திருக்கின்றார் சித்தார்த்தனோடு கதைத்திருக்கின்றார். நாங்கள் ஏற்றுக்கொண்டு அப்படி செய்வோம் என்று கூறவில்லை. அதைப் பற்றி யோசிப்போம் என்று தான் சொன்னார். அவ்வாறெனில் பாராளுமன்ற குழுவிலே அந்த முடிவு எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது கூட்டமைப்பினுடைய ஒருங்கிணைப்பு குழுவிலே அந்த முடிவு எடுத்திருக்க வேண்டும். பாராளுமன்றகுழுவிலும்நான் இருக்கின்றேன். ஒருங்கிணைப்பு குழுவிலும் நான் இருக்கின்றேன் அப்படியான முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. இந்த அச்சரகணித விதி, தொழினுட்ப ரீதியான தந்திரம் எல்லாம் இங்கு பலிக்கப்போவதில்லை. எதையோ நம்பி எதையோ இழந்த கதையாகிப்போகும். உதாரணமாக மட்டக்களப்பு மாநகர சபையை எடுத்தால் 20 வட்டாரங்கள் இருக்கின்றது 12 பட்டியல் உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். ஒவ்வொரு வட்டாரத்திலும் கடந்த 2018 ஆம் ஆண்டு நடந்த மாநகர சபைத் தேர்தலிலே 3 கட்சியாக நாங்கள் போட்டியிடும் போதும் மட்டுக்கு மட்டாகத்தான் நாங்கள் வெற்றியை பெற்றோம். ஆயிரக்கணக்கான வாக்குகளால் நாங்கள் வெற்றிபெறவில்லை. அதனால் தான் 20 வட்டாரத்திலும் 17 வட்டாரத்தை வென்றும் எங்களுக்கு பட்டியல் ஆசனம் ஒன்றும் கிடைக்கவில்லை.

**தொடரும்...**

**நேர்காணல் : இரணியன்**

# விளையாட்டு

## Sotokam Karate do Self defense Acadamy இன் ஒழுங்கமைப்பில் Karate Ceremony 2023

கடந்த 22.01.2023 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 9.30 மணியளவில் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் Sotokam Karate do Self defense Acadamy இன் ஒழுங்கமைப்பில் Karate Ceremony 2023 நிகழ்வுகள் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கௌரவ டீ.ஆ கீர்த்தி குமார ( SLKF, பொது செயலாளர்), விசேட விருந்தினர்களாக MR.T.Thileskumar (மேலதிக அரச அதிபர், வவுனியா), MR.Jayakoody (Chief Inspector of Police H/Q1 Vavuniya), MR.T.Amalan (District Sports Officer), திரு. K.P.S கரன் (I.G.K.S.B.A, SL முதல்வர்) எனப் பல அதிதிகள் கலந்துகொண்டு இந்நிகழ்வினைச் சிறப்பித்தனர்.

இலங்கை கராத்தே சம்மேளனத் தேசிய அமைப்பினால், அக்கடமியின் அதிகாரிகளுக்கான டிப்ளோமா பட்டமளிப்பு விழாவும், 2022ஆம் ஆண்டு சாதனையாளர்களை கௌரவிற்கும் நிகழ்வும், அனைத்து மாணவர்களின் பங்களிப்புடன் கராத்தே திறமை













## டெஸ்ட் கிரிக்கெட்டில் அஸ்வின் புதிய சாதனை

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய வீரர் அலெக்ஸ் கேரியை ஆட்டமிழக்க செய்ததன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் 450 விக்கெட்டுகளை கைப்பற்றிய இரண்டாவது இந்திய பந்துவீச்சாளர் என்ற சாதனையை படைத்துள்ளார் அஸ்வின்.

அதோடு, ஆசிய அளவில் டெஸ்ட் கிரிக்கெட்டில் 3000+ ரன்கள் எடுத்து, 450+ விக்கெட்டுகளை வசப்படுத்திய ஒரே வீரர் என்ற சாதனையையும் அவர் படைத்துள்ளார்.

இந்திய அளவில் முதல் இடத்தில் முன்னாள் வீரர் கும்ப்ளே உள்ளார். 132 போட்டிகளில் விளையாடி மொத்தம் 619 விக்கெட்டுகளை அவர் கைப்பற்றியுள்ளார். அதேபோல இந்த சாதனையை குறைவான போட்டிகளில் விளையாடி விரைந்து எட்டிய இரண்டாவது வீரராகவும் உள்ளார் அஸ்வின். இது அவர் விளையாடும் 89ஆவது டெஸ்ட் போட்டி.

இலங்கை அணியின் முன்னாள் வீரர் முரளிதரன் 80 போட்டிகளில் இதைச் செய்திருந்தார்.

பந்துகளின் எண்ணிக்கையிலும் அஸ்வின் இரண்டாவது இடத்தில் உள்ளார். மொத்தம் 23,635 பந்துகளை வீசி இந்தச் சாதனையை அவர் எட்டியுள்ளார். அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் மெக்ராத், டெஸ்ட் கிரிக்கெட்டில் 23,474 பந்துகளில் இந்தச் சாதனையை எட்டியவர்.

36 வயதான அஸ்வின் கடந்த 2011இல் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுக வீரராக களம் கண்டார்.

முதல் போட்டியில் இரண்டு இன்னிங்ஸையும் சேர்த்து 9 விக்கெட்டுகளை கைப்பற்றி ஆட்டநாயகன் விருதை வென்றவர். 9 முறை டெஸ்ட் தொடரில் தொடர் நாயகன் விருதை வென்றுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் 3ஆவது இடத்தில் உள்ள பந்துவீச்சாளர், 2ஆவது இடத்தில் உள்ள சகலதுறை ஆட்டக்காரராகவும் அஸ்வின் உள்ளார்.

அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட களம் இறங்கிய அஸ்வின் 23 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




## துருக்கி நிலநடுக்கம்: பிரபல கால்பந்து வீரர் மாயம்!



துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பிரபல கால்பந்து வீரர் கிறிஸ்டியன் அட்சு மாயமானதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

துருக்கியின் தென்கிழக்கு பகுதியில் சிரியாவின் எல்லையையொட்டி அமைந்துள்ள சிறிய தொழில் நகரம் காசியான்டெப். இங்கு அன்று அதிகாலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

நிலநடுக்கத்தின்போது துருக்கியின் பல பகுதிகளில் உள்ள நூற்றுக்கணக்கான கட்டிடங்கள் சீட்டுக்கட்டு சரிவது போல நொடிப்பொழுதில் இடிந்து தரைமட்டமாகின. 1,500-க்கும் அதிகமான கட்டிடங்கள் இடிந்து விழுந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலநடுக்கத்தால் இதுவரை சுமார் 4000க்கும் அதிமானோர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில் பிரபல கால்பந்து கிளப் அணிகளான செல்சியா எப்.சி மற்றும் நியூகேஸ்டில் எப்.சி அணிகளின் முன்னாள் முன்னணி வீரர் கானாவை சேர்ந்த கிறிஸ்டியன் அட்சு மாயமானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் இயக்குநர் டானர் சவூத்தையும் காணவில்லை என ஹடேஸ்போர் கிளப்பின் செய்தி தொடர்பாளர் முஸ்தபா ஓசத் தெரிவித்துள்ளார்.

மேலும் இவர்கள் இருவரையும் தொடர்பு கொள்ள முடியாததால் இவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என நம்பப்படுகிறது என்றார். ஹடேஸ்போர் அணியை சேர்ந்த அட்சு மற்றும் சவூத் ஆகிய இருவரை மட்டுமே இன்னும் காணவில்லை மற்ற வீரர்கள் பாதுகாப்பாக உள்ளனர் என தெரிவித்தார்.

இது குறித்து கானா ஜனாதிபதி கூறுகையில், துருக்கி நாட்டு மக்களுக்கு இரங்கல் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் எங்கள் நாட்டு குடிமகன் கிறிஸ்ட்டியன் அட்சு பாதுகாப்பாகவும், ஆரோக்கியமாகவும் இருக்க வேண்டும் என நாங்கள் பிரார்த்திக்கிறோம் என கூறியுள்ளார்.


# உலக வலம்

## சக்திவாய்ந்த பூகம்பத்தால் துருக்கி 5 முதல் 10 மீட்டர் வரை நகர்ந்து இருக்க வாய்ப்பு

சக்திவாய்ந்த பூகம்பத்தால் துருக்கி 5 முதல் 10 மீட்டர் வரை நகர்ந்து இருக்க வாய்ப்பு உள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். துருக்கி - சிரியா எல்லையில் கடந்த 6 ஆம் திகதி அதிகாலை 7.8 ரிச்டர் அளவில் பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. துருக்கியைத் தாக்கிய சக்திவாய்ந்த பூகம்பங்கள் அது அமைந்திருக்கும் டெக்டோனிக் தகடுகளை மூன்று அடி (10 மீட்டர்) வரை நகர்த்தியிருக்கலாம் என்று நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இத்தாலிய பூகம்ப நிபுணர் பேராசிரியர் கார்லோ டோக்லியோனி இதுபற்றி தெரிவித்த போது, துருக்கி மேற்கு நோக்கி சிரியாவுடன் ஒப்பிடும் போது ஐந்து முதல் ஆறு மீட்டர் வரை நகர்ந்திருக்கலாம் என்று தெரிவித்தார். மேலும், சிரியாவுடன் ஒப்பிடுகையில், மதிப்பீடுகளில் துருக்கி உண்மையில் ஐந்து முதல் ஆறு மீட்டர் வரை நகர்ந்திருக்கலாம்.லெபனான்தலைநகர் பெய்ரூட், சிரியா தலைநகர் டமஸ்கஸ் மற்றும் எகிப்து நாட்டின் கெய்ரோ நகர் வரை பூகம்பம் உணரப்பட்டு உள்ளது என்று தெரிவித்தார். இத்தாலியின் தேசிய புவி இயற்பியல் மற்றும் எரிமலைக் கழகத்தின் தலைவர், இவை அனைத்தும் ஆரம்ப தரவுகளின் அடிப்படையில் அமைந்தவை என்றும், மேலும் துல்லியமான தகவல்கள் வரும் நாட்களில் செயற்கைக்கோள்களில் இருந்து கிடைக்கும் என்றும் தெரிவித்தார். இதையடுத்து பேசிய பேராசிரியர் டோக்லியோனி, 190 கிலோமீட்டர் நீளமும் 25 அகலமும் கொண்ட இந்த சிதைவு, நிலத்தை கடுமையாக உலுக்கி, 9 மணி நேர இடைவெளியில் இரண்டு மிகத் தீவிரமான சிகரங்களை எட்டிய வரிசையை ஏற்படுத்தியது. உண்மையில், பூமி தொடர்ந்து நடுங்கியது. ரிச்டர் அளவுகோலில் 5 -6 டிகிரி அளவுக்கு குறிப்பிடத்தக்க தீவிரத்துடன் அழிந்தது.

இதற்கிடையில், எண்ணற்ற சிறிய அதிர்வுகளும் ஏற்பட்டுள்ளன. இவை எல்லாம் சில நொடிகளில் நடந்தது. அரேபிய டெக்னோனிக் தகடுகள் தென்மேற்கு நோக்கி துருக்கி நகர்ந்தது போல் உள்ளது. நாங்கள் மத்தியதரைக் கடலில் மிகவும் ஆபத்தான பகுதிகளில் ஒன்றான அதிக நில அதிர்வுப் பகுதியைப் பற்றி பேசுகிறோம். கடந்த நூற்றாண்டுகளில் மிகவும் கடுமையான பூகம்பங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார். நிலநடுக்கத்தில் இருந்து தப்பியவர்களில் 90 சதவீதத்திற்கும் அதிகமானோர் முதல் மூன்று நாட்களுக்குள் மீட்கப்பட்டுள்ளனர் என்று லண்டன் பல்கலைக்கழக கல்லூரியின் பேரிடர் மற்றும் சுகாதார பேராசிரியர் இலன் கெல்மன் தெரிவித்தார்.




## வடகொரிய இராணுவத்தின் 75ஆவது ஆண்டு விழா



வடகொரிய இராணுவம் நிறுவப்பட்டதன் 75ஆவது ஆண்டை குறிக்கும் வகையில், அந்நாட்டின் தலைநகர் பியாங்யாங்கில் பிரம்மாண்ட அணிவகுப்பு விழா நடைபெற்றது. இந்த விழாவில் வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன் கலந்து கொண்டு இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக அதிபர் கிம் ஜாங் உன் எந்தப் பொது நிகழ்விலும் தோன்றாமல் இருந்த நிலையில், இராணுவ அணிவகுப்பில் தனது மகளுடன் கலந்து கொண்டு நாட்டு மக்களுக்கு இன்ப அதிர்ச்சி அளித்தார். இந்த இராணுவ அணிவகுப்பில் வடகொரியாவின் அணு ஆயுத அலகுகளும் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## 1000 ஊழியர்களை பணிநீக்கம் செய்கிறது YAHOO

1,000 ஊழியர்களை பணிநீக்கம் செய்ய இருப்பதாக அறிவித்துள்ளது யாஹூ நிறுவனம்.

ஒருகாலத்தில் இணைய உலகில் கொடிகட்டிப் பறந்த யாஹூ. கூகுள் வருகைக்குப் பிறகு தன் வசம் இருந்த பயனர்களை இழக்கத் தொடங்கியது. கூகுளுக்கு நிகராக அனைத்து சேவைகளையும் வழங்கினாலும், யாஹூவால் கூகுளை முந்த முடியவில்லை. இருப்பினும் யாஹூ இணைய உலகில் தாக்குப்பிடித்து நின்று கொண்டுதான் இருக்கிறது. இந்நிலையில் கூகுள், மெட்டா, மைக்ரோசொப்ட், அமேசான், டிக்டொக் , டிஸ்னி நிறுவனங்களை தொடர்ந்து தற்போது யாஹூ நிறுவனமும் ஆட்குறைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அதன்படி சுமார் 1,000 ஊழியர்களை பணிநீக்கம் செய்ய இருப்பதாக அறிவித்துள்ளது யாஹூ நிறுவனம். இதுகுறித்து யாஹூ நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் ஜிம் லான்சோன் வெளியிட்டுள்ள அறிக்கையில், யாஹூ நிறுவனத்தின் வணிக விளம்பர தொழில்நுட்ப பிரிவில் மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக ஆட்குறைப்பு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் இந்த ஆண்டு இறுதிக்குள் விளம்பர தொழில்நுட்ப பிரிவில் மட்டும் 20 சதவீதம் முதல் 50 சதவீதத்துக்கும் அதிகமானோர் வேலை இழப்பார்கள் என்று தெரிகிறது.

கொரோனா பரவல் மற்றும் ரஷ்யா-உக்ரைன் போரின் தாக்கத்தால் சர்வதேச அளவில் பொருளாதார மந்தநிலை ஏற்பட்டுள்ளது.

இதன் எதிரொலியாக செலவினங்களை குறைக்கும் விதமாக கூகுள், அமேசான், மெட்டா உள்ளிட்ட பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் ஆட்குறைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

பிரபல பொழுதுபோக்கு நிறுவனமான டிஸ்னி 7,000 ஊழியர்களை பணி நீக்கம் செய்வதாக அறிவித்திருந்த நிலையில் யாஹூவும் ஆட்குறைப்பு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.




## 7000 ஊழியர்களை வெளியேற்றும் டிஸ்னி !

நாடு முழுவதும் உள்ள பல நிறுவனங்களைப் போலவே, டிஸ்னியும் சவாலான பொருளாதார சூழலில், செலவுகளைக் குறைக்கும் முயற்சிகளின் ஒரு பகுதியாக மாற்றங்களைச் செய்கிறது. பொழுதுபோக்கு நிறுவனமான டிஸ்னி புதன்கிழமை அதன் பணியாளர்களில் 7,000 ஊழியர்களை பணிநீக்கம் செய்வதாக அறிவித்துள்ளது. ஆள்குறைப்பு நடவடிக்கையில் அமெரிக்கத் தொழில்நுட்ப நிறுவனங்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறது. கொரோனா தொற்றின் மீட்சிக்குப் பிறகு, தொழில்நுட்ப நிறுவனங்கள் பொருளாதார நிலையில் சரிவைச் சந்தித்து வருகிறது. இதை ஈடுகட்ட ஊழியர்களை பணிநீக்கம் செய்கிறது.

இந்நிலையில் டிஸ்னியும் 7,000 ஊழியர்களை பணிநீக்கம் செய்வதாக அறிவித்துள்ளது. இது குறித்து நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி இகர் (Iger) கூறுகையில், "நாடு முழுவதும் உள்ள பல நிறுவனங்களைப் போலவே, டிஸ்னியும் சவாலான பொருளாதார சூழலை சந்தித்துள்ளது. அதனால் செலவுகளைக் குறைக்கும் முயற்சியாக மாற்றங்களைச் செய்கிறது. நிறுவனம் முழுவதும் 5.5 பில்லியன் அமெரிக்க டொலர் செலவுகளைக் குறைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பணிநீக்கம் நடவடிக்கை மூலமே இதை சரி செய்து இலக்கை அடைய முடியும்.

நிறுவனத்தின் 2021ஆம் ஆண்டு அறிக்கையின்படி, அந்த ஆண்டு ஒக்டோபர் 2 வரை உலக அளவில் 1,90,000 பேர் டிஸ்னியில் பணிபுரிந்துள்ளனர். இவர்களில் 80 சதவிகிதம் பேர் முழுநேரம் வேலை செய்பவர்கள். நான் இந்த முடிவை இலகுவாக எடுக்கவில்லை. உலகெங்கிலும் உள்ள எங்கள் ஊழியர்களின் திறமை மற்றும் அர்ப்பணிப்புக்காக எனக்கு மிகுந்த மரியாதை உள்ளது" என இகர் கூறியிருந்தார்.



# ١٥ஆம் ஆண்டு நினைவு தினம்

பிறப்பு : 1968 . 12 . 11

இறப்பு : 2013 . 02 . 12



## கந்தசாமி மோகனதாஸ்

தண்ணீர் ஊற்று முள்ளியவளை, முல்லைத்தீவு.

இருந்தாலும் மறைந்தாலும்
பெயர் சொல்ல வேண்டும்
இவர் போல யார் என்று
ஊர் சொல்ல வேண்டும்

தகவல் :- குடும்பத்தினர்
T. P-0776043090
























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 12.02.2023 அன்று வெளியிடப்பட்டது.